
# அறுவடை

# ARUVADAI

# අරුවඩයි



கதிர் - I

மணி - II

தை 2006 இலங்கையின் பல்சுவை மாத இதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

*அறிவு என்பது ஒரு பூந்தோட்டம்.*
*அதில் தேடல் என்னும் நீர்பாய்ச்சி*
*வாசிப்பு என்னும் வாசனையை நுகர்.*
*சமூகத்தில் நீ ஒரு முழு மனிதன்*

## தமிழ்:- அறுவடை


### போஷகர்கள்

**திரு. S.M.கோபாலரட்ணம்**
மூத்த தமிழ் பத்திரிகையாளர்,
இலங்கை.

**வண. M.V.E.இரவிச்சந்திரன்**
பங்குத்தந்தை விகோரியார் தேவாலயம்
சாவகச்சேரி.

**திரு. S.சிவமகாராஜா**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர், பலநோக்குக்
கூட்டுறவுச்சங்கம்,
யாழ்ப்பாணம்.

**திரு. S.சிறில்**
தலைவர்
பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
யாழ்ப்பாணம்.

**திரு. S.J.கணநாதன்**
ஒய்வு பெற்ற மின்சாரசபை
பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

**பேராசிரியர். N.சண்முகலிங்கம்**
அரசறிவியல், சமூகவியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

**பேராசிரியர். P.சிவநாதன்**
பொருளியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

**திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
சட்ட ஆலோசகர்.

**பிரதம ஆசிரியர்**
-J.பாரதி

**இணை ஆசிரியர்கள**
- R. விக்ரர்
-N.சூரியன்

**கணனிப்படைப்பு**
- K. பிரியா
-A.அரவிந்

**விளம்பரப்படைப்பு**
S.A.குமார்





விலை 30/=

180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 9545
தொலைநகல் : 021 222 9545
web:- tn:centre.com
E.mail: info@ tni centre.com

**தமிழ் செய்தி தகவல் மையத்தின் படையல்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாசகர் நெஞ்சங்களே!

அறுவடையின் முதலாவது படையலை வெளியிடுவதற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அறுவடையாளர்களான படைப்பாளிகள், அச்சகத்தார், அன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பித்த முக்கியஸ்தர்கள் மற்றும் வருகைதந்த தமிழ்ச்செய்தி தமிழ் மைய அங்கத்தவர்கள், வாசித்து, ரசித்துச் சுவைத்த உங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வண்ணமே தொடரும் இதழ்களுக்கும் உங்கள் ஆதரவினை நாடி நிற்கின்றோம். புதுப்புது நறுமணங்களுடன் மலரப்போகும் இவ்விதழ், உங்களை மகிழ்வித்து வளப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. நாம் தற்போது அனுபவித்து வரும் இன்னல்கள் தற்காலிகமானதே. அனுபவித்துப் பழக்கப்பட்டவர்கள் நாமன்றோ. மலரும் 2006 இல் ஓர் நிம்மதியான எதிர்காலம் எம்மவர்க்குக் கிட்டி, சுதந்திரமான ஓர் சமூகத்தில் அறுவடை, சுதந்திரமாக உலாவர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

– ஆசிரியர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நட்பு

பேனாவும் விரல்களும்
அடுக்கிய தாள்களும்
நட்புக்குச் சொல்லும்
பல அர்த்தம்.



அவன் மேல் கொண்ட
நட்பினை,
கண் காணா நட்பினை
அவனுக்குத் தெரிவிக்கும்
நான் வடிக்கும் கவிவரிகள்.
நிழற் படத்தில்
அவன் முகம் பார்க்கும் பொழுதெல்லாம்
கண்ணுக்குள் சென்று
மனவோடையில் விழுந்து எழுகின்றான்.
முன்பின் அறிமுகமில்லை....
ஒன்றாய்ப் படித்ததில்லை....
ஒன்றாய் ஊர்சுற்றியதுமில்லை...
உண்ணவில்லை
உறங்கவில்லை....
இருப்பினும்.....

விரல் கொண்ட பேனாவின்
ஸ்பரிச உறவினால்
கருத்தரித்த எம் நட்பு....
இன்று பிரசவமாய்....
கவி வர்ணனைகளுடன்.....!

– ஜெ.துஸ்ஷா –
1ம் வருடம் நடனத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில்



சூரிய ஒளி வெண்மையாகத் தோன்றினாலும் அதில், சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா ஆகிய ஏழு நிறங்கள் அடங்கியுள்ளன. ஒரு பட்டகத்தின் (Prism) வழியே செல்லும் சூரிய ஒளி, அதன் மறுபுறம் இந்த ஏழு நிறங்களாகப் பிரிந்து செல்லும். மழைத்துளி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பட்டகம் போல் செயற்படுகின்றன. சூரியனின் ஒளிக்கதிர் ஒன்று மழைத் துளியில் புகும்போது அது பல நிறக் கதிர்களாகப் பிரிகின்றது. மேலும் நீர்த்துளியின் பின்புறமானது ஒரு கண்ணாடி போல் செயற்பட்டு அந்நிறக்கதிர்களைப் பிரதிபலிக்கின்றது. இவ்வாறு பிரதிபலிக்கப்படும் நிறக்கதிர்கள், நீர்த்துளியை விட்டு வெளியேறும் போது, ஒவ்வொரு நிறமும், ஒவ்வொரு கோணத்தில் கோட்டமடைந்து தனித்தனிப் பாதையில் செல்கின்றன. இவ்வாறு, ஏராளமான நீர்த் துளிகளால் சூரியனின் ஒளிக்கதிர்கள் கோட்டமடைந்து மீளுவதால் ஏற்படும் நிறமாலையே வானவில்லாகத் தோன்றுகிறது.

வானவில் தோன்றுவதற்கு மழைத்துளிகள் விழுந்து கொண்டிருக்க வேண்டும். வெயிலும் இருக்க வேண்டும். மழைத்தூறல் நின்றால் வானவில் மறைந்து விடும். மேலும், வானத்தில் சூரியன் பூமியிலிருந்து 42° கோணத்திற்கு உட்பட்ட நிலையில் இருந்தால்தான், மழைத்துளியிலிருந்து வெளிப்படும் ஒளி, பூமிக்குத் திரும்பும். அப்பொழுது நாம் வானவில்லைப் பார்க்கமுடியும். சூரியன் 42° கோணத்திற்கு மேலே இருந்தால் மழைத்துளியிலிருந்து வெளிவரும் ஒளி பூமியை எட்டாது. ஆகவே, காலையில் மேற்கு வானத்திலும், மாலையில் கிழக்கு வானத்திலும் மட்டுமே வானவில் காணப்படும்.

சூரியன் தாழ்வாக இருந்தால் வானவில் பெரிதாகத் தெரியும். சூரியன் உதிக்கின்ற அல்லது மறைகின்ற நேரத்தில் தோன்றும் வானவில், அரைவட்ட அளவிற்குக் காணப்படும். நீர் வேகமாக விழும் அருவிகளின் அருகே தோன்றும் நுண்ணிய நீர்த்துளிகளின் மீது சூரிய ஒளி விழும் போது, அங்கு வானவில்லின் நிறங்கள் வில்போல் தோன்றுகின்றன.

மிக அரிதாகச் சந்திர ஒளியினாலும், வானவில் உண்டாவதுண்டு. இதன் நிற அமைப்பும் சூரிய வானவில்லைப் போன்றவையாகும். ஆனால், சூரியனை விடச் சந்திரனின் ஒளி மங்கலாக இருப்பதால், சந்திரனால் உண்டாகும் வானவில்லும் மங்கலாகவே தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமா முனிவர்

(1680-1747) தமிழ்மொழிக்கு அருந்தொண்டாற்றிய ஐரோப்பிய அறிஞர் களுள் ஒருவர் வீரமாமுனிவர். இவர் இத்தாலி நாட்டில் மருத்துவா மாவட்டத்தில் காஸ்திரியோனே என்னும் சிற்றூரில் 1680 ஆம் ஆண்டு நவம்பர் 8ல் பிறந்தார். இவருடைய இயற்பெயர் கொன்ஸ்டான்ஸ் யோசப் பெஷி (Constanzo Giuseppe Beschi) என்பதாகும்.



இவர் இளமை முதலே பல மொழிக ளைக் கற்பதில் ஆர்வமுடையவராக இருந்தார். 18 ஆம் வயதில் கத்தோலிக்கத் திருச்சபையின் யேசு சபையில் சேர்ந்தார். இத்தாலியம், கிரேக்கம், எபிரேயம் (Hebrew), லத்தீன், போர்ச்சுகேசியம் முதலிய மொழிகளில் புலமை பெற்றார். பாதிரியார் பணிக்குரிய கல்வி பயின்று, 1709ல் பாதி ரியார் பட்டம் பெற்றார். 1710ல் இந்தியா விற்கு வந்து தமிழ் நாட்டில் சமயத் தொண்டு புரியத்தொடங்கினார். தஞ்சாவூர், அரியலூர், மதுரை, காமநாயக்கன்பட்டி, கயத்தாறு முதலிய ஊர்களில் வீரமா முனிவர் பணியாற்றினார்.

சமல நூலைத் தமிழருக்குப் போதிக்க வேண்டுமென்று கருதித் தமிழ் பயின்றார். தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுத் தேரந்தார். தமிழில் தாமே நூல்கள் இயற்றும் ஆற்றல் பெற்றார். சமஸகிருதம், தெலுங்கு, உருது மொழிகளையும் நன்கு கற்றார். பல இந்திய மொழிகளைக் கற்றாலும், இவர் தமிழின் மீது மிகுந்த பற்றும், ஆர்வமும் கொண்டிருந்தார். தம்முடைய பெயரை தைரியநாதசுவாமி என வைத்துக் கொண்டார். பின்னர் அக்கால தமிழச் சங்கத்தார், இவருடைய பெயரை வீரமா முனிவர் என மாற்றினர். இப்பெயரே நிலைத்து விட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோனான் குப்பம் என்ற ஊரில் தேவதாயாரின் திருவுருவத்தைத் தமிழ்நாட்டுப் பெண்மணி போல் அமைத்தார். அத்தாய்க்கு பெரிய நாயகி அம்மையார் எனப் பெயர் சூட்டினார். அம்மாவட்டத்தில் உள்ள லொக்குறிச்சி என்ற ஊரில் அமைந்திருந்த அடைக்கல மாதாகோவிலில் ஆண்டு தோறும் விழா ஏற்பாடு செய்தார். 1742 வரை லொக்குறிச்சியிலிருந்து தொண்டாற்றி வந்தார். பிறகு தூத்துக்குடி சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு சிறிது காலம் தங்கினார். பின் கேரளத்திலுள்ள குருமடத்துக்குச் சென்றார். அங்கு 1747 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி காலமானார்.

வீரமா முனிவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு மிகப் பெரியது. இவர் தேவதாயாரின் மீது உள்ளத்தை உருக்கும் தேம்பாவணி என்னும் பெரும் காப்பியம் பாடினார். வேதவிளக்கம், பேதகமறுத்தல், வேதிய ஒழுக்கம் முதலிய பல உரைநடை நூல்களை எழுதி, தமிழில் உரை நடை நூல்கள் பெருக வழிகாட்டினார். கொடுந்தமிழ் இலக்கணம், செந் தமிழ் இலக்கணம், செந்தமிழ் விளக்கம் முதலிய இலக்கண நூல்களை எழுதினார். மேலை நாடுகளில் வழங்கிய அகராதி முறையில் அமைந்த தமிழ் அகராதி ஒன்றை உருவாக்கியர் இவரே.

இவரது சதுர அகராதியே பிற்காலத் தமிழ் அகராதிக்கெல்லாம் முன்னோடி. தமிழ் - லத்தீன் அகராதி, போர்த்துக்கேசியம் - தமிழ் - லத்தீன் அகராதி என்னும் அகராதிகளையும் இவர் தயாரித்தார். திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இவர் லத்தீன் கவிதையாக மொழிபெயர்த்துள்ளார். இவருடைய இம்மொழி பெயர்ப்பு, ஐரோப்பியர்கள் திருக்குறளின் பெருமையை அறிந்து கொள்ள உதவி செய்கிறது.

## முக்கியமானவர்களின் உறைவிடங்கள்

- ★ வத்திக்கான் – போப்பாண்டவரின் அலுவலக இல்லம்
- ★ வெள்ளை மாளிகை – அமெரிக்க ஜனாதிபதி மாளிகை
- ★ டவுனிங்தெரு – இங்கிலாந்து பிரதமரின் இல்லம்
- ★ ராஸ்டிரபதி – வபன் – இந்திய ஜனாதிபதியின் இல்லம்
- ★ பங்கிரம் மாளிகை – எலிசபேத் மகாராணியின் மாளிகை
- ★ போகர் மாளிகை – இந்தோனேசியா தலைவரின் மாளிகை
- ★ அலரி மாளிகை – இலங்கை ஜனாதிபதி மாளிகை
- ★ எலிலி மாளிகை – பிரெஞ்சு தலைவர் மாளிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

இன்றைய இந்தக் காலகட்டத்தில் எந்தவொரு இளைஞனைப் பார்த்தாலும் வீதியோரங்களிலும், சந்திகளிலும், கடைகளிலும் தான் காணக்கூடியதாக உள்ளது. இவர்களில் வயது வித்தியாசமின்றிப் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற பேதமின்றி அனைவரும் சேர்ந்து நிற்பதை இங்கு எல்லா இடங்களிலும் அவதானிக்க முடிகிறது. இதற்கு என்ன காரணமாயிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? இன்றைய சூழ்நிலையில் பொருளாதாரம் என்பது பெரும் பிரச்சினையாகிவிட்டது. அந்த வகையில் படித்து முடித்தாலும் வேலையில்லை என்று சலிப்புடன் வாழுகின்றார்கள். ஏன் இளைஞர்களாகிய நீங்கள் வேலை இல்லை, வேலை இல்லை என்று அலுத்துக் கொள்கிறீர்களே தவிர, ஒரு முறை முயற்சித்துப் பார்த்தீர்களா? ஏன் உங்களால் முன்னேற முடியவில்லை. உங்களில் நீங்கள் நம்பிக்கை கொண்டு வாழவேண்டும். இளைஞர்கள் அப்படிச் சிந்திப்பதில்லை. தன்னம்பிக்கை இல்லாதவர்களாகத் திகழ்கின்றார்கள். எமக்கு இரண்டு கைகளையும் இறைவன் ஏன் தந்திருக்கிறான்?



சோம்பேறிகளாக இருப்பதற்கா அல்லது மற்றவர்களுடைய உழைப்பில் வாழ்க்கையைக் கழிப்பதற்காகவா? சற்று சிந்தித்துப்பாருங்கள். 'படித்துப் படித்து என்னத்தைக் கண்டனாங்கள். ஒரு வேலையும் இல்லை. வேலை தாறம் என்று சொல்லி எவ்வளவு காலம் அரசாங்கம் ஏமாத்தும். நாமும் எத்தனை நாட்கள் பகிஷ்கரிப்புச் செய்வது' என்ற கேள்விக் குறியுடன் வாழாமல், இவற்றையெல்லாம் அப்படியே விட்டிட்டு ஒவ்வொரு மனிதனும் தனது சுயமுயற்சியினால் முன்னேறலாம். விதையை மண்ணில் விதைக்கும்போது, அது மண்ணிலே முட்டி மோதினால் தான் முளைவரும், இல்லையேல் மன்ணோடு மண்ணாக மடிந்து போய்விடும். அதேபோல் தான் நாமும் எத்தனை மோதல்களுக்கும், தடைகளுக்கும் சவால்களுக்கும் அடிபட்டு முயற்சி செய்தால் தான் முன்னேறவாய்ப்புண்டே தவிர, இப்படியே வேலை இல்லை என்றிருந்தால் நாமும் மண்ணோடு மண்ணாகப் போகவேண்டியது தான். ஏன் நாமும் முட்டி மோதிப்பார்த்தால் என்ன? முயன்று பாருங்கள். வெற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையை எட்டிவிடுவீர்கள். நாம் வாழும் போது எத்தனை பயனுள்ள மனிதனாக வாழ்கின்றோமோ அதே மாதிரி நாம் மடிந்த பின்பும் எமது வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டாமா? ''நீ உயிரோடு எவ்வளவு காலம் வாழ்ந்தாய் என்பது முக்கியமல்ல, நீ இறந்த பின் எவ்வளவு காலம் வாழப்போகின்றாய் என்பது தான் முக்கியம்''. அதே மாதிரித்தான் நாமும் எங்களுடைய வாழ்க்கையை நிர்ணயிக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு இலட்சியம் வேண்டும். சிலர் டொக்டராகவும், இஞ்சினியராகவும், ஆசிரியராகவும் வரவேண்டும் என்று பல இலட்சியங்களை வைத்து முன்னேறுபவர்களும் இருக்கிறார்கள். சில பேர் சிறுவயதில் படிக்கும் போது, என்னத்திற்குப் படிக்கிறீர்கள் என்று கேட்டால் மேற்குறிப்பிட்ட காரணங்களைத் தான் சொல்லுவார்கள். ஆனால், அந்த வார்த்தை, வளர்ந்தவுடன் தானாகவே அவர்களை விட்டு அகன்று விடுகிறது என்பது யதார்த்தமான உண்மை. ஒவ்வொரு மனிதனும் எப்படி வாழ வேண்டும் என்பதற்காக இறைவன் சகல படைப்புக்களையும் எங்களுக்கு அளித்திருக்கின்றான். இவற்றையெல்லாம் சந்தோஷமாக அனுபவிக்காமல் இருந்து விட்டால் எங்களுடைய வாழ்க்கை எப்படி அர்த்தம் பெறும்? அல்லது இவ்வளவு காலம் ஏன் வாழ்ந்தோம் என்று சிந்திப்பதும் மனித இயல்பாகிவிட்டது. ஆகவே, இளைஞர்களே! இலட்சியம் இல்லாத வாழ்க்கை, துடுப்பு இல்லாத படகு போன்றது என்பார்கள். அதே மாதிரித் தான் உங்கள் வாழ்க்கை துடுப்பு இல்லாத படகு போல் இருக்காமல், ஒரு இலட்சியம் உள்ள மனிதனாக மாற முயற்சியுங்கள். முதலில் உங்கள் மேல் நம்பிக்கை வையுங்கள். பிறர் அப்படிச் சொல்லுகிறார்கள், இப்படிச் சொல்லுகிறார்கள் என்பதை கருத்திலே எடுக்காமல், உங்கள் வாழ்க்கையின முன்னேற்றப் பாதைக்கு நம்பிக்கையுடன் கால் எடுத்து வையுங்கள். சிறிது சிறிதாக ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். அதில் ஒரு திருப்தி தோன்றும்.

இப்படியே இவற்றைக் கொண்டு என்னுடைய வளர்ச்சிப் படிக்கு என்ன செய்யலாம் என்று அடுத்த காரியத்தில் இறங்குங்கள். சிந்தனையைச் சுழல விடுங்கள், திட்டமிடுங்கள். அடுத்ததாக என்ன செய்யலாம் என்று ஆழமாகச் சிந்தித்து, சரியெனப்பட்டதை தாமதிக்காமல் மனத்துணிவுடன் செய்யுங்கள். நீங்களே உங்கள்மேல் ஆச்சரியப்படும்படி உங்களின் முயற்சி அமையும். நீங்களே நம்பமாட்டீர்கள். நானா இந்தளவிற்கு வந்துள்ளேன் என்று கேட்குமளவிற்கு உங்கள் வாழ்க்கை மாறிவிடும். இப்படியாக உங்கள் இலட்சியம், குறிக்கோள் என்பதை அடையும் வரை தொடர்ந்து முயற்சியுங்கள். அடுத்தபடியாக உங்கள் எதிர்கால வாழ்க்கையைக் கற்பனை செய்யுங்கள். அதைவிட்டுவிட்டு இன்றைய இளைஞர்களால் ஒரு பைசாகூட சம்பாதிக்க முடியவில்லை. ஆனால், அவர்களுடைய எதிர்காலக் கனவு மட்டும் கோடிக்கணக்காக அமைந்துவிடும். இவையெல்லாம் ஏன்? தேவைக்கு அப்பாற்பட்ட ஆசைகள் தான் துன்பத்திற்குக் காரணம் என்பதை நன்கு உணருங்கள்.

இளைஞர்களே! இன்றிலிருந்தாவது தன்னம்பிக்கை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலில் குதிததிட முடிவெடுங்கள். நற்பாதையை நோக்கி வீறுடன் நடைபயிலுங்கள் வெற்றிகளும், மகிழ்ச்சிகளும் உங்களின் அருகே ஆமைபோல் நகர்ந்து கொண்டிருக்கும். வாய்ப்புக்கள் எப்போதும் ஜன்னல்கள் வழியே எம்மைத் தேடிவருமென்று இருக்காமல், அதைத் தேடி நாம்தான் போகவேண்டும். இப்படியான பாதைகளில் செல்லாமல் ஏன் தீவிரமான பாதைகளில் போகிறீர்கள். எமது நாட்டில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, குழுக்களிடையே மோதல்கள் மலிந்தே காணப்படுகின்றது. இவற்றை ஏன் இல்லாதொழிக்க முடியாது. ஒவ்வொரு இளைஞனும் நம்பிக்கை கொண்டால், ஒரு நாளென்ன ஒரு நொடிப் பொழுது போதும். இவற்றை ஏன் சிந்திக்கிறீர்கள் இல்லை? அல்லது எமக்கேன் இந்தத் தேவையில்லாத வேலை. யாரும் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்று சுயநலத்துடன் இருக்கிறீர்களா? இந்த நாடு எமது நாடு. இதைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினரிடம் ஒரு அழகான நாடாக ஒப்படைக்க வேண்டிய கடப்பாடு எமக்குத்தான் உண்டு என்பதை நன்கு உணருங்கள். எமது நாடென்று சொல்வதைவிட இது "எனது" நாடு என்று ஒவ்வொரு மனிதனும் உரிமை கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த அழகான நாட்டை நாம் பார்க்க முடியும்.

நேற்றைய சிறுவர்கள் இன்றைய இளைஞர்கள், இன்றைய இளைஞர்கள் நாளைய எம் நாட்டின் தலைவர்கள். இதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். கல்வியில் கூட உயர்ந்த இடத்தில் திகழ்ந்த எங்கள் சந்ததிகள் இன்று குட்டிச்சுவராக, அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ வேண்டிய நிலைமை ஏன் வரவேண்டும்? இவைகள் எல்லாம் உங்களின் மனக்கணக்கில்தான் உள்ளது. முயற்சிப்பாதையை நோக்கி சிந்தனையை அலைய விடுங்கள். எத்தனையோ படித்த இளைஞர்கள் வேலை இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணங்களாக இருக்குமென்று சிந்திக்கிறீர்களா? ஒருபொழுதேனும் சிந்திக்காமல் சோம்பேறிகளாக வாழ நினைத்தால் இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதும் வீதியில் நின்று கைநீட்ட வேண்டிய நிலைதான் வரும். இது எமக்குத் தேவைதானா? சிலபேர் செய்கிற தொழிலை பெரியளவில் வியாபாரமாக்கினால்கூட, அதில் எத்தனை வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும். இப்படியான முயற்சிகளை ஏன் உங்களால் செய்ய முடியாது. ஆரம்பத்தில் எல்லாமே கஷ்ரமாகத்தான இருக்கும். முதலுக்கு என்ன செய்வது? எங்கே போவது? என்ற கேள்வியை விட்டுவிடுங்கள். மற்றவர்களிடமோ அல்லது உறவினர்களிடமோ அல்லது வங்கிகளிடமோ பணத்தைப் பெற்று, ஒரு காரியத்தினை செய்து அதில் வரும் லாபம் மூலம் நீங்கள் பெற்ற பணத்தினை திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படும். இப்படியாக பலகோணங்களில் சிந்திக்காமல் இருந்து கொண்டு, ஒவ்வொரு பெற்றோர்களையும் ஏமாற்றி, உங்களையும் நீங்களே ஏமாற்றி, ஊதாரித்தனமாக எவ்வளவு காலம் தான் வாழ்க்கையைக் கழிப்பது?

தற்போதைய காலகட்டத்தில் ஒரு இளைஞனிடம் ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு கைத்தொலைபேசி (Hand Phone) இவைகள் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் கௌரவக்குறைவு என்று சிந்திக்கும் இளைஞர்கள்தான் நம் நாட்டில் அதிகம். பொருள், பண்டங்கள் எல்லாமே அழிந்து போகும் சொத்து. அவைகள் மட்டும் என்னத்திற்கு? முன்னேறிப் பாருங்கள். உங்கள் பெயருக்கு முன்னால் இனிசல் (Initial) இருந்தால் மட்டும் போதாது. இறந்த பின்பும்கூட உங்கள் பெயரோடு எவ்வளவு புகழ் இருக்கும் என் பதை உணருங்கள். இந்தச் சமுதாயத்தில் உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற முறையில் அனைவருக்கும் அழைப்பு விடப்பட்டிருக்கின்றது. இந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். இறப்பதற்கு முன்னால் இறுதிக் காலத் தில் கவலைப்படுவதை விட, இப்பொழுதே உங்கள் பயணத்தை ஆரம்பியுங்கள். உங்களுக்கும் சிறகுகள் இருப்பதை ஏன் மறந்து போனீர கள்? புழுக்களாக உணர்கிறீர்களா? உங்களை நீங்களே முடமாக்கிக் கொள்ளவேண்டாம். சிறகை விரியுங்கள். வானம் அதோ பரந்து கிடக்கின்றது. நம்பிக்கையுடன் செயற்படுங்கள் வெற்றி நிச்சயம்.

*– மாருதி*

---

# சும்மா சிரியுங்கோ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயம்



மனித வாழ்வில், பயம் ஓர் ஆட்கொல்லி நோயாகும். இதனால் பீடிக்கப்பட்ட குழந்தைகள் தாழ்வு மனப்பான்மை, சோர்வு, முகமலர்ச்சியின்மை, ஒதுங்கி இருத்தல் போன்ற பண்புகளுக்கு இலக்கா கின்றனர். பயத்தினால் பீடிக்கப்பட்டவன் பல முறை இறக்கின்றான் துணிவுள்ளவன் ஒரு முறை தான் இறக்கின்றான்.

வீட்டிலே அம்மாவுக்குப் பயம்,
பின்னேரம், வேலையில் இருந்து வரும் அப்பா வுக்குப் பயம்.
கல்லூரிக்குப் போனால் ரீச்சருக்குப்பயம்.
கல்லூரி முடிந்துவரும் போது, றோட்டில் வரும் வாகனத்துக்குப் பயம்.
குளிக்கப்போனால் தண்ணிக்குப் பயம்.
தண்ணி போட்டுவிட்டு வரும் வெறிகாரனுக்குப் பயம்.
விசர் நாய்க்குப் பயம். பூனைக்குப் பயம்.
பாம்புக்குப் பயம், பூச்சிக்குப் பயம், ஏன் ஆச்சிக்கும் பயம்.

இப்படி எல்லாவற்றுக்கும் பயந்தால் பயமே வாழ்க்கையாகப் போய் விடாதோ. எனவே மாணவர்களாகிய நாம் 'பயம்' என்ற சொல்லை ஆராய்ந்து, எமக்குள் என்ன பயம் உள்ளது என்று அறிய முயற்சிக்க வேண்டும். சிலருக்கு மேடைப்பயம், இருட்டுக்குப் பயம். 'பயம் கொள்ளத் தேவையில்லை பாப்பா' என்று பாடினானே பாரதி, அவருக்கு என்ன நடந்தது என்று அறப்படித்த மாணவன் ஒருவன் கேட்பதும் என் செவிக ளுக்குக் கேட்கின்றது.

நான் ஏற்கனவே கூறியது போல், எனக்குள் ஒழிந்திருக்கும் பயத்தை இனம் கண்டு அதைப் போக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்காக நெருப்புச் சுடுமெனத் தெரிந்து கொண்டு அதனுள் கைவைக்கலாமோ? இதை அசட்டுத் துணிவு என்பதா? அல்லது முட்டாள்தனம் என்று கூறு வதா? எமக்குத் தெரியாது. ''அச்சம் தவிர் ஆண்மை தவறேல்'' என்பதற் கேற்ப, விசேடமாக ஆண் மகனுக்குப் பயம் என்பது அறவே கூடாது.

கவிஞர் கண்ணதாசன்கூட தனது பாடல் ஒன்றில், ''அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா'' என்று கூறிச் சென்றார்.

இந்த அருமையான வரிகளை நாங்கள் மறந்து விடலாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன், மனிதனாக வாழவேண்டும். சமகாலப் போக்கை நாம் உற்று நோக்கின், தமிழ் மக்களாகிய எமக்கு ''பயம்'' ஓர் எதிரி. இவ்எதிரி எம்மை அணுக ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, பயம் என்ற பதம் பக்தியுடன் சேர்ந்து இருத்தல் அவசியம். அப்படி வாழப்பழகினால்தான் வாழ்வு வளம்பெறும். உதாரணமாக இறைவனுக்கு பயபக்தி, குருவிற்கு பயபக்தி, பெற்றோருக்கு பயபக்தி ஏன் செய்யும் தொழிலுக்கு விசேடமாக பயபக்தி இருத்தல் வேண்டும். இப் பயபக்தி எம்மிடையே இருப்பின் நாட்டில் லஞ்சம், ஊழல் போன்ற தொழில் குற்றங்கள் இல்லாமல் போய்விடும். இப்போது முற்கூறிய பயத்திற்கும் பின்னர் கூறிய பயத்திற்கும் உள்ள வேறுபாடு விளங்குகின்றதல்லவா?

இறுதியாக இப்பயத்தை எவ்வாறு இல்லாது ஒழிக்கலாம் என்று உற்றுநோக்கின். உடற்பயிற்சி, விளையாட்டு ஆகிய உடலுக்கு வலு வூட்டும் பழக்கங்களைக் கல்வியுடன் சேர்த்து வளர்க்க வேண்டும்.

''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'' என்பதற்கேற்ப, சந்தர்ப்பத்திற்கேற்ப எம்மையும், பிறரையும் பாதுகாக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். ஆகவே, மாணவ மணிகளே! பயத்தைவிட்டு உற்சாகமாக எல்லாவற்றையும் சமாளிப்பேன் என்ற தைரியம் கொண்ட ஒரு வெளிச்சமான உலகத்திற்கு வாருங்கள். உங்கள் நடையிலேயே ஒரு மாறுதல் தென்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

- விக்டர்

---

***மனோநலம் பாதித்த ஒருவன்:***
டோர்ச்லைட்டை அடித்து அந்த ஒளியில் நான் நடந்து மேலே போவேன்.

***நண்பன்:***
அது சரி, நீ வழியில் விழுந் திடுவாயே.

***மனோநலம் பாதித்தவன் :***
சீ! நான் கவனமாக நடப் பேன்.



***நண்பன்:*** விசரா, நான் - நீ பாதியில போறநேரம் டோச்சை நிப்பாட்டிப் போடுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி அறிமுகம்

விண்வெளி பற்றிய ஓர் அறிமுகத்தை நாம் இங்கு பார்ப்போம். அதன் மூலம் விண்வெளித் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளலாம்.

**விண்வெளி என்றால் என்ன?**



பகலில் வானத்தில் பிரகாசமாக ஒளிருகின்ற சூரியன், இரவில் தெரிகின்ற பெரிய சந்திரன், மின்னுகின்ற புள்ளிகளாய் தெரியும் கோள்கள், நட்சத்திரங்கள், விண்கற்கள். இவையெல்லாம் சேர்ந்ததுதான் விண்வெளி. விண்வெளி என்பது ஓர் பெரிய வெளி. இந்த வெளியில் நாம் சுவாசிப்பது போல காற்று இல்லை. காற்று இல்லாதிகைத்தான் வெளி என்கிறோம். இந்த வெளியில்தான் அந்தரத்தில் சூரியன், நாம் வாழும் பூமி, சந்திரன், கோள்கள், நட்சத்திரங்கள், வால்வெள்ளிகள் எல்லாமே இருக்கின்றன.

சரி - அந்தரத்தில் இவை எப்படி முட்டி மோதாமல் இருக்கின்றன? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். அதைப்பற்றி நாம் இப்போது பார்ப்போம் -

சூரியன் இருக்கின்றது.
சூரியனைச் சுற்றிக் கோள்கள் இருக்கின்றன.
கோள்களைச் சந்திரன் சுற்றுகின்றது.

நமது பூமியில் செய்கோள்கள், விண்கலங்கள் சுற்றுகின்றன. இவை எப்படிச் சுற்றுகின்றன என அறிந்தால் அதன் அடிப்படையில் விணவெளியில் நட்சத்திரங்கள், கோள்கள் இன்னோரன்ன பொருட்கள் எல்லாம் இயங்குகின்றன என்பது புரியும். ஒரு கயிற்றை எடுத்து, அதன் ஒரு நுனியில் கல் ஒன்றைக் கட்டுங்கள். கட்டிய பின், கயிற்றின் மறுமுனையைக் கையால் பிடித்தவாறு அதனைச் சுற்றுங்கள். அப்போது கயிறு சுற்ற, கல்நுனி சுற்றுகிறது. இது ஏன்?

கயிற்றைச் சுற்றும் போது கல்லுக்கு விசை கிடைக்கின்றது. அது மையவிலக்கு விசை எனப்படுகிறது. அதாவது கயிறு சுழற்றப்படுகையில் கல் உங்கள் கையை விட்டுப் பறப்பதற்காக ஒரு இழுவை இழக்கும். நீங்கள் கயிற்றை விடவில்லை. அதனால் அப்போது கல்வெளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பறக்க முடியாது. அதனால் அது ஒரு வட்டப் பாதையில் சுற்றும். அதாவது கல்லுக்கு நீங்கள் ஆரம்பத்தில் கொடுத்த மைய விலக்கு விசை அதனை வெளியே இழுக்கிறது. அதனை வெளியேற விடாமல் கயிற்றால் நீங்கள் பிடித்துள்ளீர்கள். இதன் விளைவாகக் கல் வட்டப் பாதையில் இயங்க ஆரம்பிக்கிறது.

இது போலவே ஒரு காலத்தில் சூரியனின் வேகமான சுழற்சியின் போது, அதிலிருந்து குழப்புநிலை பொருட்கள் வீசி எறியப்படுகின்றன. இவ்வாறு வீசி எறியப்படும் போது, அவற்றிற்கு ஒரு விசை கிடைக்கிறது. அதுதான் கல்லுக்கு நாம் அளித்தது போன்ற விசை. அது அந்த குழப்புநிலைப் பொருட்களை வெளியே செல்ல வழங்குவதாகும். அந்த மைய விலக்கு விசைக்கு இணையாக குழப்புநிலைப் பொருட்களை சூரியனின் ஈர்ப்பு விசை வலுவாக இழுத்தது. இதன் விளைவாக அவை சூரியனை வட்டப்பாதையில் வலம் வரத்தொடங்கின - வலம் வருகின்றன.

இப்படி பூமிக்கு சந்திரன் போல் பிறகோள்களுக்கும் சந்திரன்கள் சுற்றுகின்றன. அதேபோல் ரொக்கட் மூலம் மேசை, கதிரை, எதை அனுப்பினாலும் அவை பூமியை இப்படி வலம் வரும். இப்படி ஒரு மையத்தை வைத்து ஈர்ப்புவிசையின் ஒழுங்கில்தான் கோள்கள் , நட்சத்திரங்கள் முட்டி மோதாமல் இயங்குகின்றன.

விண்வெளியில் எமது பூமி உள்ளிட்ட கிரகங்களும், அவை சுற்றி வருகின்ற சூரியனும் சேர்ந்த தொகுதியைப் பால்வீதி மண்டலம் என்று அழைப்பர். பிரபஞ்ச வெளியில் கோடிக்கணக்கான பால்வீதி மண்டலங்கள் உள்ளன என்றால் விண்வெளியின் விசாலிப்பு எத்தகையது என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம்.

**K.பிரியா**



***விமலன்:*** ஏன்டா சோகமா இருக்கே?

***தயாளன்:*** அகராதி வாங்கப் பணம் அனுப்பும்படி அப்பாவுக்குக் கடிதம் போட்டேன்.

***விமலன்:*** அதனால் என்ன?

***தயாளன்:*** அப்பா அகராதியே வாங்கி அனுப்பிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி உளவியல் பற்றிய ஓர் அறிமுகம்

பிரயோக உளவியலின் ஒரு பகுதி கல்வி உளவியல் ஆகும். அநேகமாக இது மாணவர்களிடம் ஏற்படும் நடத்தை பற்றியதாகும். பிள்ளைகளின் தேவைகள், அவர்கள் நடத்தையைப் பாதிக்கும் காரணங்கள், அவர்களின் உடல் - உள - மனவெழுச்சி - சமூகவிருத்திகளின் இயல்புகள் ஆகியனபற்றி ஆசிரியர் அறிந்திருக்க் வேண்டியது அவசியமாகும். எவ்வாறான சூழ்நிலை, ஒரு மாணவனின் கற்றலைத் தூண்டக்கூடியது என்பதுபற்றி அறிந்திருக்க வேண்டியது ஒரு ஆசானின் தலையாய கடமையாகும்.

உளவியல் என்பது பற்றி நாம் உள்ளே நுழைந்து பார்த்தால், 2000 ஆண்டுகளுக்கு முன் உளவியல், ஆன்மாவைப் பற்றிய அறிவு மட்டுமேயாக இருந்தது. படிப்படியாக முன்னேற்றமடைந்து அது உள்ளத்தைப் பற்றியதாகவும், நனவு நிலை பற்றியதாகவும், பின் இறுதியாக மனித நடத்தை பற்றியதாகவும் மாற்றமடைந்தது. இன்று அது விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்படுகிறது. விஞ்ஞானத் துறையைப் போன்றே உளவியலிலும் கருவிகள், பரிசோதனை முறைகள் ஆகியனவற்றின் உதவியுடன் கோட்பாடுகளும், விதிகளும் உருவாக்கப்படுகின்றன.

உளவியல் வளர்ச்சியின் சில முக்கிய கட்டங்களாக உளவியல் துறை சார்ந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம். இதனை ஆரம்பித்தவர் அரிஸ்ரோட்டில் என்றாலும், இதன் விஞ்ஞான முறை ஆய்வுகள் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டது. 1596 - 1650 வரையான காலப்பகுதியில் வாழ்ந்த டெஸ்காட்டேஸ் என்பவரே, உள்ளத்தைப் பற்றி முதன் முதலில் சிந்திக்கத் தொடங்கினார். இவரின் கருத்துப்படி சூழலிலிருந்து எம்மை அடையும் ஒளி, ஒலி போன்ற செயற்பாடுகளினால் உடலுக்கும் உள்ளத்துக்குமான தொடர்பு இருக்கிறதென்றும் இத்தூண்டிகள் புலனுறுப்புகளூடாகச் சென்று, மூளையை அடைந்து அதன் மூலம் உருவாகும் சக்தி, வேண்டிய நேரத்தில் சதைகளுக்கு சென்று, துலங்கல்களை ஆக்கி உடலை இயக்குகின்றது என்றும், உடல் வேறு உள்ளம் வேறு என்றும் கருதினார்.

உளவியல் முன்னேற்றத்தில் முக்கிய இடம் வகிப்பவரான ஜெர்மானிய உளவியலாளரான *வெபர்* என்பவரே பரிசோதனை முறைகளை அறிமுகம் செய்தவராவார். இவர் புலனுணர்ச்சி, அனுபவம் என்பன சம்பந்தமாக ஆய்வுகளை நடாத்தினார்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வில்லியம் வூண்ட் என்பவர் உளவியல் ஆய்வுக்காக ஓர் ஆய்வுகூடத்தை நிறுவினார். இதனால் உள்ளத்தைப் பற்றிய ஆய்வுகள் ஆய்வுகூடங்களில் பதிவாகின. இவரின் ஆய்வுகள் புலக்காட்சி, உயர் உளத் தொழிற்பாடு, நடத்தை என மூன்று கூறுகளாக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைத் தொடர்ந்து ஜேர்மானிய உளவியலாளரான கோலர், கொல்கா, வேதிமர், லிவின் போன்றோர் புலக்காட்சி, அகக்காட்சி, பிரச்சினை விடுவித்தல் பற்றியும், எப்பிங்கோஸ், குல்பே, பியாஜே, ஆகியோர் ஞாபகம், சிந்தனை, கவனம் போன்றன பற்றியும், மக்டுகஸ், தோண்டைக், ஹல், ஸ்கின்னர் நடத்தை பற்றிய ஆராச்சியிலும் ஈடுபட்ட னர். கடந்த காலங்களில் உளவியல் பரந்த அளவில் அதிவிரைவாக வளர்ச்சி அடைந்தது.

### *உளவியல் ஆய்வுமுறைகளை எடுத்து நோக்கின்...*

1. வாழ்க்கை சம்பவ பதிவு
2. அகநோக்குமுறை
3. வளர்ச்சி முறை
4. தனியாள் வரலாற்றுமுறை
5. பரிசோதனை முறை

போன்றன மூலம் ஆய்வுகளை நடாத்தலாம். முக்கியமாக பாடசாலை யின் கல்வி உளவியல் பற்றிப் பார்ப்போமானால் உடல், உள்ளம் மன எழுச்சி, அறநெறி ஆகிய சகல தன்மைகளிலும் முழுமையான முதிர்ச் சியை மாணவர் பெற முயற்சிப்பதே கல்வியின் குறிக்கோளாகும். இது பற்றி ஆசிரியர்களின் பொறுப்புகளைப் பார்போமானால் -


1. அடிப்படைப் பழக்கங்களும், திறமைகளும்
2. பரந்த அறிவு
3. அறிவு சார் திறன்கள்
4. மனவெழுச்சி முதிர்ச்சி
5, சமூக முதிர்ச்சி

என்பன பற்றி அறிந்திருத்தல் அவசியமாகின்றது. கல்வி உளவியலின் பெரும்பகுதி பிள்ளைகளின் உளவளர்ச்சி, மனவளர்ச்சி, சமூக வளர்ச்சி, போன்றவற்றிலே தங்கியுள்ளது. சிறந்த ஆசிரியன் ஒருவன் ஒரு உளவிய லாளனாக இருப்பது வரவேற்கப்படுகின்றது. அப்படி இருப்பவராக இருந்தால்தான் மாணவர்களின் உளவியல் தேவைகள், மனமுறிவின் போது ஏற்படும் பிரச்சினைகள, அவர்கள் மனப்பாங்கு, நாட்டம், ஆளுமை என்பது பற்றி அறிந்தவராக இருப்பார். அத்துடன் அவர்கள் எவ்வாறு கற்கிறார்கள், ஞாபகம், புலக்காட்சி, கவனம், சிந்தனை, அவர்களின் திறமைகளை எப்படி மதிப்பிடுவது அல்லது பிழையான வழியில் சென் றால் எப்படி வழிகாட்டல் வழங்குவது என்பது பற்றித் தெரிந்திருக்கும். ஒவ்வொரு ஆசிரியரும் உளநூல்கள் பலவற்றைக் கற்பதன் மூலம் எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தை வளர்க்க முடியும் என்பது உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள்

சொந்த இடம் எமதே - ஆனால்
வந்த சிங்களவன் படைமுகாம் இங்கே
பெயரோ பாதுகாப்பு வலயம் - எம்
உயிரோ துயரின் பிடியில் நிதமும்...



ஈராண்டு தசாப்தங்களாய் - எமக்கு
போரின் கெடுபிடிகள் தொடர்ந்து
உடமைகள் அழிக்கப்பட்ட
கொடுமைகள் எண்ணிலடங்கா...

ஊரிழந்து உறவிழந்து - நாம்
ஊனர்களானோம் உணர்வுகளால்
சமாதானப் பேச்சுக்களால்
சாதகமோ பேரினத்திற்கு,
ஆட்சிமாறி கட்சிமாறி
பூச்சாண்டி காட்டும் அரசியலிங்கே..
மீளப்புனரமைப்பைக் காட்டி
மேல் நாடுகளில் கையேந்தும் உதவி
பாதிக்கப்பட்ட எமக்கென்று
பாதுகாப்புச் செலவிற்கே போதாது...

பள்ளிகளில் படைமுகாம்
குடியிருப்புக்களில் தடைமுகாம்,
சொந்த ஊரிலே - எம்மை
சொத்தையாக்கிவிட்ட போரியல்...

தேசம் விட்டு தேசம் அலையாமல்
அகதியென்ற கௌரவப்பட்டம்,
படிக்காமலே பெற்றிடலாம்
தமிழராய் இங்கிருந்தால்...

வீதிகளில் செல்லும் போதும்
வில்லங்கம் தான் படையினரால்,
விபத்தென்னும் விதியைச்சாட்டி
அபத்தமான உயிர்ப்பறிப்புக்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைப் புதினம் பார்த்தால்
யுவதியுடன் சிப்பாய் சேஷ்டை
புரியுதிங்கே மனித உரிமைகள்
எரிந்திடும் உளக் குமுறல்கள்தான்...

பேச்சுவார்த்தை ஆடுகளத்தில்
பகடைக்காய் தமிழினம்
அரசியலில் பதவி நிலைத்திட
அரங்கேற்றும் நாடகங்கள்...

ஓரிரண்டா சொல்வதற்கு
ஓராயிரம் கொடுமையெமக்கு
மனித உரிமை பேணலல்ல
நடப்பதெல்லாம் மீறல்கள்...

*G. கஸ்தூரி*

# Money

**It can buy a House**
**But not a Home**

**It can buy bed**
**But not Sleep**

**It can buy a Clock**
**But not Time**

**It can buy you a Book**
**But not Knowledge**

**It can buy you a Position**
**But not Respect**

**It can buy you Medicine**
**But not Health**

**It can buy you Blood**
**But not Life**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டின் சாதனை வீரர் பிறைன்லாரா



இன்று சர்வதேச அரங்கில் அரசியல் போன்று எல்லோராலும் பேசப்படுகின்ற ஓர் விடயமாக கிரிக்கெட் விளங்குகின்றது.

பாமரன் தொடக்கம் பாவலன்வரை சிறு வர் - முதியவர், ஆண் - பெண் என்ற வேறு பாடு இன்றி கிரிக்கெட்டுடன் பொழுதைக் கழிக்கின்றவர்களின் தொகைதான் அதிகம்.

எல்லா நாட்டு மக்களாலும் விரும் பப்படுகின்ற கிரிக்கெட் விளையாட்டில் சாதனை நிகழ்த்துவது என்பது அவ்வளவு சுலபமான விடயமல்ல என்பதை யாவரும் புரிந்துகொள்வீர்கள்.

கிரிக்கெட் உலகில் சாதனைக்குமேல் சாதனைகள் புரிந்துகொள்ளவும் சில வீரர்கள் தவறவில்லை. இவ்வாறே பல சாதனைகளைத் தன்வசம் கொண்டிருப்பவர்களில் மேற்கிந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும், உலகின் தலைசிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரருமான பிறைன் லாரா முதன்மையானவர்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களையும், டெஸ்ட் தொடரில் ஒரே இனிங்ஸ்சில் அதிக ஓட்டங்கள் பெற்றவர் என்ற சாதனையைத் தன்வசம் தக்கவைத்துக்கொண்டிருக்கும் இந்தச் சாதனை வீரர், மேற்கிந்தியாவில் ரினிடாட்டின் சான்டா கிரஸ் நகரில் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி பிறந்தார் இவர், டெஸ்ட் போட்டியில் 11187 ஓட்டங்கள் என்ற மைல்கல்லையும், ஒரே இனிங்ஸில் ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்கள் என்ற உலக சாதனையையும் நிகழ்த்தியுள்ள சாதனை வீரர் ஆவார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 21 வயதிலே டெஸ்ட் போட்டியில் அறிமுகமான லாரா, தனது முதல் டெஸ்ட் ஆட்டத்தை லாகூரில் பாகிஸ் தான் அணிக்கு எதிராக ஆரம்பித்தார். அவர் அந்தப் போட்டியில் 2 இனிங்ஸில் 446 ஓட்டங்களைப் பெற்றார். சாதனைக்காக ஏங்கியிருந்த நட்சத்திர நாயகன் டெஸ்ட் போட்டியில் முதற் சதத்தைப் பெறுவதற்கு 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. முதலாவது சதத்தை 1993 ஆம் ஆண்டு சிட்னி நகரிலே உலக சம்பியனாகத் திகழும் அவுஸ் ரேலிய அணிக்கு எதிராகப் பெற்றார். இவருக்கு இந்த முதல் சதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டைச் சதமாக அமைந்தது. கிரிக்கெட்டில் நிகழ்த்தப்படுகின்ற சாதனைகள் சொந்தமாக, நீண்டகாலமாக நிலைப்பதில்லை. ஒரு வீரர் சாதனை நிலைநாட்ட இன்னொரு வீரர் விலகுவது வழமையான ஒன்றே. இந்த விடயத்தில் லாரா விதிவிலக்கல்ல. டெஸ்ட் போட்டியில் ஒரு இனிங்ஸில் அதிக ஓட்டங்கள் (35) என்ற சாதனையை 1994 ஆம் ஆண்டு தக்கவைத்திருந்த மேற்கிந்திய அணி வீரரான கரிசோபஸ்தார் என்பவரது சாதனையை லாரா அதே ஆண்டு சென் ஜோன்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 375 ஓட்டங்களைக் குவித்து சாதனையை நிலைநாட்டினார்.

லாராவால் நிகழ்த்தப்பட்ட 175 ஓட்டங்கள் என்ற சாதனையை 2003 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய வீரர் மத்தியூ கைடனுடன் பேர்த் மைதானத்தில் சிம்பாவே அணியுடன் முறியடித்தார். மத்தியூ கைடன் சாதனையை சரியாக ஓராண்டு கழிவதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டு சென் ஜோன்ஸ் மைதானத்தில் முதலிலே சாதனையை நிகழ்த்திய அதே இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டம் இழக்காமல் 400 ஓட்டங்கள் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார். லாரா நிகழ்த்திய சாதனை ஓராண்டு ஆகியும் இதுவரையும் எந்தவொரு துடுப்பாட்ட வீரராலும் நெருங்கிக்கூடப் பார்க்கமுடியவில்லை. அதுமட்டுமல்ல, 13 ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் 1000 ஓட்டங்களைக் கடந்த லாரா 121 ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் 11000 ஓட்டங்கள் என்ற மைல் கல்லை தாண்டியுள்ளார். ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் அவுஸ்ரேலியாவின் வீரர் அலன் போடரினால் நிலைநாட்டப்பட்ட டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் (11174) என்ற உலக சாதனையை 36 வயதான லாரா தனது 101 ஆவது டெஸ்ட் போட்டியில், அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அலன் போடரின் சாதனைக் கடந்து 11187 என்ற புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவரது இந்தச் சாதனையை முறியடிப்பதற்கு டெஸ்ட் போட்டியில் விளையாடிக்கொண்டிருப்பவர் 1000 இற்கும் அதிகமான ஓட்டங்களைப் பெறவேண்டும். அதுவரையும் சாதனை நாயகனின் சாதனை நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கும் என்பதில் மாற்றமில்லை.

டெஸ்ட் போட்டிகளில் அதிக தடவைகள் 2 சதங்கள் பெற்றவர்கள் வரிசையில் இரண்டாம் இடத்திலும், 31 டெஸ்ட் சதங்களைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

- *ஜனா வின்சன்.* -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வே உலக சமாதானம்

''நல்ல யுத்தம் என்று ஒன்று இருந்ததுமில்லை.
கெட்ட சமாதானம் என்ற ஒன்று இருந்ததுமில்லை''
என்றார் பேரறிஞர் பென்ஜமின் பிராங்லின்.



அரசியலின் ஒரு வடிவமாக யுத்தமும், யுத்தத்தின் ஒரு வடிவமாக அரசியலும் கருதப்படுகின்ற இன்றைய கால கட்டத்தில், யுத்தங்கள் பரவலாக பரவிக் கொண்டிருக்கின்றன. ஒருவனின் அழிவிலேயே இன்னொருவனின் ஆக்கம் இருபபதாக நம்புகின்ற இவ்வுலகத்திலே, யுத்தங்களினால் ஏற்படும் கொடூரங்கள் பெரிய விடயங்களல்ல. ஹிரோஷிமாக்கள், நாகசாகிகள் இப்போதும் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறைத்து விடமுடியாது.

வீரம் முதன்மை பெற்ற பழந்தமிழ் சமூகத்திலும் யுத்தமே முதன்மை பெற்றது. வீரத்தின் பெயரால் விளைந்த சோகங்கள் ஏராளம். பூவாகிக் காயாகிக் கனியாகும் முன்பே எருவாகிப் போனவர்கள் ஏராளம். இந்த வகையில் வளர்ந்த யுத்தங்கள் கடந்த காலங்களில் பல காரணங்களால் முதன்மை பெற்றன. ஏகாதிபத்தியப் போர்கள், சுதந்திரப் போர்கள், சித்தாந்தப் போர்கள் எனப் பல வடிவங்களைப் பெற்றுள்ளன.

இன்று தேசிய வாதம் மறைந்து வருகின்றது. உபதேசியவாதம் வளர்ந்து வருகிறது. இனரீதியான முன்னெடுப்புக்கள் வலிமை பெறுகின்றன. தேசம் என்ற கட்டுமானம் வலிமை குன்றி வருகின்றது. கடந்த நூற்றாண்டில் சோசலிச உலகிற்குத் தலைமை தாங்கிய சோவியத் யூனியன் 1999 ஆம் ஆண்டளவில் சிதறுண்டு போனது. 15 பொதுநல அரசுகள் உருவாகின. இதற்குக் காரணம் இனரீதியான முரண்பாடுகளே.

பல்லின அரசுகளில் பெரும்பான்மை இனங்கள், சிறுபான்மை இனங்களை அடக்க முனையும் போது முரண்பாடுகள் தோன்றுகின்றன. இவை யுத்தமாக வளர்ச்சி பெறுகின்றன. நவீன அரசுகளில் இனங்களின் வரலாறுகள் இரத்தத்தால் எழுதப்படுகின்றன.

இனம், மதம், நிறம், பொருளாதாரம் என்பவற்றால் மோதல்கள் வெடிக்கின்றன. தென்னாபிரிக்காவில் அண்மைக்காலம் வரை, இன அடிப்படையில் பெரும்பான்மை கறுப்பின மக்களைச் சிறுபான்மை வெள்ளையர்கள் ஒடுக்கினார்கள். சீனாவில் திபெத்தியர்கள் சீனாவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்து விடுதலை பெறக்கோரிப் போராடுகிறார்கள். கனடாவில் பிரான்சியர்கள் அதிகம் வாழும் கியூபெக் மாகாணத்தவர்கள் மேலதிக உரிமை கோரிப் போராடுகிறார்கள். அமெரிக்கர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து இஸ்லாமிய சமூகம் கிளர்ந்தெழுகிறது. இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து பலஸ்தீனர்கள் போராடுகிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? மனித மனங்களிடையில், இனங்களிடையில் புரிந்துணர்வு இல்லாமையே என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஈழத்தில் நடைபெற்று வந்த 20 வருடகால கொடூரயுத்தம் இன்னும் ஓய்வுக்கு வரவில்லை. போர் மேகங்கள் இம்மண்ணில் விலகவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் இதற்கு வழி செய்யவில்லை. இலங்கையில் சமாதானமா? சதா யுத்தமா? என்பது இந்நாட்டு மக்களின் மனங்களிலேயே தங்கியுள்ளது என்பதை யாரும் மறக்கலாகாது.

ஒரு குடும்பத்தில் தாய், தந்தை, குழந்தைகள் அனைவரும் புரிந்துணர்வுடனும், விட்டுக் கொடுப்புடனும் வாழ்வார்களானால் அக்குடும்பம் மகிழ்ச்சியான, சிறப்பான குடும்பமாக அமையும். அதே போலத்தான் நாமும் ஒருநாட்டில் இனத்தால், மதத்தால், நிறத்தால் பல இன மக்கள் வாழ்கின்றபோதும், அவர்கள் யாவரும் இறைவனின் குழந்தைகள் எனும் எண்ணம் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுமாயின், அவர்கள் அனைவரும் அன்பு எனும் பாசத்தளையில் கட்டுப்படுவராயின், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடனும், புரிந்துணர்வுடனும் நடப்பார்களாயின், உலகில் யுத்தம் எனும் அரக்கன் அகில உலகத்தையும் விட்டு அகன்று விடுவான்.

சமத்துவம் உள்ள மண்ணில் தான் சண்டைகள் குறையும். பல்லின மக்கள் வாழும் தேசங்களில் பெரும்பாலும் சமஷ்டி ஆட்சி முறை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரங்கள் பகிரப்படுகின்றன. சுவிஸ்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா போன்ற நாடுகளையெல்லாம் அமைதிப் பூங்காக்களாக மாற்றியது அங்குள்ள இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வே என்பதை யாரும் மறந்து விடமுடியாது. ஆனால் இன்று அரைகுறையாக சமஷ்டி உள்ள இந்தியா இன, மத முரண்பாடுகளால் திண்டாடிக்கொண்டு இருக்கின்றது.

எங்கு திணிப்புக்கள் இருக்கிறதோ, எங்கு அடக்குமுறைகள் இருக்கிறதோ அங்கெல்லாம் அவற்றுக்கெதிரான எழுச்சிகள் உருவாகின்றன, முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. போர் மேகங்கள் சூழ்கின்றன. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகின்றது. எனவே,

''புதியதோர் உலகம் செய்வோம்"
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

என்ற பாவேந்தரின் அடிகளை நெஞ்சில் நிறுத்தி, மனித மனங்களில் ஏற்படும் புரிந்துணர்வே இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும். அப்புரிந்துணர்வே உலக சமாதானத்தையும் ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் விடுதலை பற்றிய பார்வையில் மகாகவி பாரதியும், பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையும்.



படைப்பாளன் சமூகத்தினால் உருவாக்கப்படுகின்ற அதேவேளையில், சமூக உருவாக்கத்திலும் தாக்கம் செலுத்துவனவாக அவன் படைப்புக்கள் அமைகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டு பல வழிகளிலும், புது வழியில் சமூகம் பயணிப்பதற்கான எல்லைக்கோடாய் அமைந்து, அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட மாற்றமானது தவிர்க்க முடியாமல் மக்கள் வாழ்வையும் பாதித்தது. இதுவரை, சிறு ஊர்வட்டத்திற்குள் சுருங்கியிருந்த சிந்தனை - தேசியம் நோக்கி விரிவுபெற்றது. கூட்டுக்குடும்பம் சிதைய, தனிமனித வாதம் முனைப்புற்ற சூழ்நிலையில் - நவீன இலக்கியத்தின் தேவை தவிர்க்க முடியாத சூழ்நிலையில், இதுவரை செய்யுள் அலங்காரத்திற்குள் சிறைப்பட்டுப் போயிருந்த தமிழ்க்கவிதை, கட்டுகளை உடைத்துக் கொண்டு பொருளிலும், வடிவிலும் புதுமை வேண்டுவதாய் பிறப்பெடுக்கின்றது. அவ்வாறு மேலெழுந்த நவீன சிந்தனைத் திரட்சியை உள்வாங்கி, தமிழ்க் கவிதைக்கு புது வழிகாட்டியவர்களாக தமிழகத்தின் யுகக்கவிஞர் பாரதியையும், ஈழத்துக் கவிமுன்னோடி பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்களையும் குறிப்பிடலாம்.

மகாகவி பாரதி, பாவலர் துரையப்பாபிள்ளையிலும் பத்துவயது இளையவராகக் காணப்படினும், இருவரது சமூகப்பார்வையும், கவிதைபறறிய இருவரது நோக்கு நிலையும் - இருவரையும் ஒப்பிட்டு நோக்குவதற்கான அடிப்படைகளை நல்கி நிற்கின்றன. எனினும் விரிந்த தளப்பரப்பில் இருவருடைய ஆளுமைகளையும் கோடிட்டுக் காட்டுவது இங்கு முடியாத காரியமாதலால், 'பெண் விடுதலை' பற்றி இருவரது நோக்கு நிலைகளையும் ஆராய முனைகின்றது இக்கட்டுரை.

எட்டயபுரத்தில் சமஸ்தான கவிஞராய் விளங்கிய சின்னச்சாமி ஐயரின் மகனாக ஆயிரத்து எண்ணூற்றி எண்பத்திரண்டு மார்கழி பதினொன்று அன்று பாரதி பிறந்தார். அவருடைய குடும்பப் பின்னணி இயல்பிலேயே வித்துவத்தன்மை நிரம்பியதாகக் காணப்பட்டது. சிறுவயதிலேயே சமஸ்தானக் கவிஞர்களுடன் அளவளாவும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருந்தது. எனவே இயல்பாகவே கவிதை ஆற்றல் பெற்றவராகக் காணப்பட்டார். மேலும் பத்திரிகைத்துறையில் இவரது பங்களிப்பானது ஏனைய தேசத்துச் செய்திகளையும், உலக விடுதலைபற்றிய எண்ணங்களையும் மேலெழச் செய்தது. அன்னியராட்சியினால் ஏற்பட்ட சமூக, அரசியல் சீரழிவுகள், இதனால் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வு - அதனை அடுத்து ஏற்பட்ட வங்கப்பிரிவு என்பனவும் பாரதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையைத் தூண்டின. மேற்படி சிந்தனைத் தெளிவோடு தான்சார்ந்த தமிழகத்து சமூகச் சூழலை நோக்கிய பொழுது, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தறிகெட்டு, பாரதம் சீரழிகின்ற தன்மை தெளிவாக அவனுக்குத் தெரிய வந்தது. சாதிப்பூசல், சமயத்தெளிவின்மை, அரசியல் அடிமைத்தனம் என்பவற்றில் பாரதத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலும் அக முரண்பாடுகள் மலர்ந்திருந்ததை நோக்கிய பாரதி - அக முரண்பாடு களை ஒழிப்பதன் மூலமே தேசிய பொது எதிரியாகிய ஆங்கிலேயர் களிடமிருந்து சுதந்திரத்தை எமது தேசம் அடையமுடியும் எனக் கருதினான்.

மனிதருக்குள்ளேயே மனிதர் பேதப்பட்டு நிற்கும் நிலமையை மாற்றுவதற்கு முனைந்த பொழுது, சமூகத்தின் இருசாராராகிய ஆண், பெண் பால்நிலையிலேயே முரண்படுகின்ற தன்மையை நோக்கி, சமூக விடுதலைக்குப் பெண் விடுதலையே வழி எனக் கண்டுகொண்டான் பாரதி. சமூக விடுதலைக்கு முக்கியத்துவம் வழங்கிய பாரதி - தன்னுடைய கவிதைகளால் அதனைச் சாதிக்க முனைகின்றான்.

'*நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல்*
*இமைப்பொழுதும் சோராதிருத்தல்*' எனக் கவிதையைத் தொழிலாக வரித்த பாரதி - கவிதையில் எளிமைப்பாடுகளைக் கொணர முனைகின்றான். 'சுவை புதிது சொல் புதிது வளம் புதிதாய் சோதிமிக்க நவ கவிதை'எனப் புதுக்கவிதைக்குப் பீடிகை போட்ட பாரதி, கவிஞனின் தற்காலக் கடமை யாது என்பதனை

'*எளிய பதங்கள் எளிய நடை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய*
*சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு*
*இவற்றினையுடைய காவியமொன்று செய்து தருவோன்*
*நம் தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்*'

எனக்கூறும் கூற்றின் மூலம் காணலாம். எனவே பொது சனங்களுக்கும் விளங்கத்தக்க வகையிலே 'சிந்து' போன்ற பாடல் வகைகளிலும் கவிதை யாத்த பாரதி - சுதேச பண்பாட்டுச் சீர்திருத்தம், பொருளாதார முன்னேற்றம், சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான நிலைபபாடு, பழைய மதச்சம்பிரதாயங்களில் சீர்திருத்தம், பெண்விடுதலை போன்ற பல்வேறு கருத்தாக்கங்களை முன்வைத்துச் செல்கின்றார். அவர் காலத் தில் பெண் கல்வி மறுக்கப்பட்டு - வீட்டின் அடிமையாய், விதவை களாய் வாழ்ந்த சூழல், அவரைப்பெண் விடுதலைமேல் பற்றுக்கொள்ளத் தூண்டின எனலாம். பாரதி 'பாரதத்தின் பழைய உரிமைச் செல்வமான ஆன்மகம், பாரதத்தின் தற்கால உரிமைப்போரினை அவாவிநின்ற லௌகீகம்' எனும் கோட்பாட்டுத் தளத்தில் நின்று, பெண் விடுதலையை அணுகுகின்றார்.

புதுமைப்பெண், பெண்கள் விடுதலைக்கும்மி, பெண்மை, பாஞ்சாலி சபதம் எனும் கவிதைகளிலும் பெண்விடுதலை தனித்துவமாகப் பேசப்பட்டிருப்பினும், ஆங்காங்கே பல இடங்களில் பெண்விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் குறிப்பிடுகின்றார். பெண்விடுதலை பற்றிய பாடல்களில் முனைப்புற்ற சிறப்பான படைப்பாகப் 'புதுமைப்பெண்' அமைகின்றது.

புதுமைப்பெண் என்னும் கவிதைத் தொகுதியிலே புதுமைப் பெண்ணின் வரவு, அவள் வரவினால் சமூகத்திற்கு ஏற்படப்போகின்ற பயன்பாடுகள் என்பனவற்றைப் புதுமைப் பெண்ணே கூறுவதாக படைத்து அமைக்கின்றரர். புதுமைப்பெண் தோற்றம் கொள்வதானது -

*'சேற்றிலே புதிதாக முளைத்ததோர்*
*செய்ய தாமரைத் தேமலர் போலொளி*
*தோற்றி நின்றனை'*.... என்ற கவிதை அடிகளின் மூலம் மரபுச் சமூகத்தில் ஒளி பெற்றுப் புதுமைப் பெண் வருவதால், சமூக இருள் அகலும் என்பது முன்வைக்கப்படுகிறது. அப்புதுமைப் பெண்ணானவள் 'பெண்களுக்குச் சுதந்திரம் உண்டு' எனக் கூறுகின்றாள் எனக் குறிப்பிடுகின்றார். அவருடைய அவ்வார்த்தைகள் மனதிலேற்படுத்திய மகிழ்வினை 'நாரதன் வீணையோ... வேய்குழல் இன்பமோ....வேதம் பொன்னுருக கன்னிகையாகியே மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ'..... எனக் குறிப்பிடுகின்றார். 'அடிமைச் சுருள் தீயில் இட்டு பொசுக்கிட வேண்டும்' எனப் புதுமைப் பெண்ணை போர்க்குணத்தோடு அறிமுகஞ் செய்கின்றார்.

பெண்ணடிமை நீங்குவதனால் இச்சமூகம் அடையும் பயன்களைக் குறிப்பிடுகின்றார். 'ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்கும்' என்னும் அவரது கூற்றானது, ஆண் பெண் சமத்துவத்தினால் பாரததேசமும் உலகமும் சுபீட்சமடையும் எனும் தேசியப்பார்வையைத் தாங்கி நிற்கின்றது.

மரபு நிலைப்பட பெண்ணுக்கு சூட்டப்பட்ட அணிகளாம் 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' - 'ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்கள்' என இதுவரை இருந்துவந்த பெண் பற்றிய பார்வைகளை மீள்பார்வைக்குட்படுத்தும் பாங்கினைப் பாரதியிடம் காண முடிகின்றது.

பெண் விடுதலை பற்றித் தாம் பேசுவது புதிய வழக்கமல்ல! பெண்ணடிமை இடைக்காலத்தே வந்து புகுந்தது. எனவே பொய்மை கொண்ட கலிக்கு மட்டுமே இது புதிது அன்றி, சதுர்மறைப்படி மாந்தர் இருந்தநாள் பொதுவான வழக்கம் எனக் குறிப்பிடுகின்றார். பாஞ்சாலி சபதத்தில் வீட்டுமாச்சாரியார் கூற்றாக -

*'ஆணொடு பெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்*
*பேணி வந்தார்'* எனக் கூறுவது முற்காலத்தில் பெண்ணடிமை இருக்கவில்லை என்பதனைத் தெளிவுறுத்துவதற்கு பாரதி கையாண்ட உத்தியாக அமைகின்றது.

அனைத்துத் தளங்களிலும் பெண்கள் விடுதலை அடைய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பாரதியின் வேணவா, பெண்களின் பணிகளை விபரிக்கையில் வெளிவருகின்றது. குடும்பத்தில், சமூகத்தில், கல்வியில் பெண்கள் மேல்நிலை எய்துதல் வேண்டப்படுகின்றது. குடும்பத்தில் கற்புப் பற்றிய பிரக்ஞையைப் பாரதி முன்வைப்பதானது, பெண்ணிய நோக்கில் கற்பு பற்றி புதிய பார்வை அளிப்பதாய் அமைகின்றது. 'குலத்து மாதர்க்கு கற்பு இயல்பு. கொடுமை செய்தும், அறிவை அழித்தும், நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்' எனக் கூறியவர் பெண்கள் 'நீசத் தொண்டு, மடமை' என்பவற்றை அழிக்க வேண்டும். ஏனெனில் அப்படிப்பட்ட பெண்களின் பிள்ளைகளும் அப்பண்புகளுடனேயே வளர்வர் என பெண்களின் சமூகக் கடமை விபரிக்கப்படுகின்றது.

பெண்ணுக்குரிய அறம் அறியாமையிலாழ்ந்து கலையின்றி வாழ்வதை பெண்கள் அகற்றவேண்டும். 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும் நிலத்திலார்க்கும் அஞ்சாத நெறிகளும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லை' எனப் பெண் அனைத்து வழியிலும் விடுதலை பெற வேண்டும் என விரும்புகின்றார்.

பெண்கள் கல்வியில் மேம்பாடடைய வேண்டும், பல்வேறு நூல்வகைகளை அறிய வேண்டும் நாற்றிசை நாடுகட்கும் சென்று புதுமை கொணர வேண்டும்... விலகி, வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் ஒழிக்கவேண்டும் என விரும்பும் பாரதி, சமூகத்தின் அனைத்துக் கட்டுக்களும் பெண்களாலேயே விடுதலை பெறும் எனும் நம்பிக்கை கொண்டவனாகக் காட்சி தருகின்றான். பெண்கள் 'சாத்திரங்கள் கற்று... மூத்த பொய்கள் யாவையும் அழித்து... மூடக் கட்டுக்கள் யாவும் தகர்த்து... ஏத்தி ஆண்மகன் போற்றிட வாழ்வர்' எனக் கூறுவதனால் இது தெளிவுறுகின்றது.

புதுமைப் பெண்ணினால் ஏற்படும் விடுதலைகளை 'மனிதர் தம்மை அமரர்களாக்கவே பராசக்தியே பெண்ணாக வடிவு கொணர்ந்தாள்' என பெண்விடுதலை பெற்றுவிட்டால் சமூக விடுதலை தேசிய விடுதலை சாத்தியமாகும் என்னும் விருப்பார்வம் பாரதியின் கவிதைகளில் இழையோடுவதனை நோக்க முடிகின்றது.

பெண் விடுதலைக்குப் பின்னான பெண்கள் எழுச்சியை, பாரதியின் பெண்கள் விடுதலைக்கும்மி சுட்டி நிற்கின்றது. 'கும்மியடி தமிழ்நாடு முழுதுங் குலுங்கிட கைகொட்டிக் கும்மியடி' என்ற கவிவரிகள் தமிழ்நாடெங்கணும் பெண்கள் விடுதலை பெற்றமையைச் சாற்றி நிற்கின்றது. பழைய மரபுகளைப் பெண்பற்றிய பார்வைகளில் துடைத்தெறிந்தோம். அந்த மரபுநிலை அழிவில் புதுச் சமுதாயம் காணவந்தோம் என்று மகிழ்வெய்திய பாரதியின் எண்ணங்களில் பழைமை அழிவுகள் கண்முன் தெரிகின்றன.

***'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்***
***றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்'***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என பெண்கல்வி விருத்திக்கு எதிரான மரபின் நினைவுகள் இல்லாமற் போன மறுகணத்தில், பெண்கள் கல்வியில் மேல்நிலை அடைகின்றனர், பட்டங்கள் ஆள்கின்றனர். சட்டங்கள் செய்கின்றனர் எனக் காட்டுகின்ற பாரதியின் கவிதை வரிகள் முக்கியமான ஒரு கட்டத்தினை அடைவதனைச் சுட்டி நிற்கின்றன.

'எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளப்பில்லை'.......
எனக் குறிப்பிடுவதானது, பெண் ஆணுக்குச் சமமானவளாக கல்வியில் உயர்நிலை அடைந்துவிட்டாள் என்னும் பேருண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. பெண்களால் எல்லாம் முடியும் என்பது 'சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்சாதி படைக்கவும் செய்திடுவோம்' எனும் வரிகள் மூலம் விபரிக்கப்படுகின்றது. ஆனால் இவ்விடத்தில் பெண்ணின் வீட்டுக் கடமைகளையும் பாரதி குறிப்பிட்டமைவதானது, மரபு தளத்தை முற்றும் நிராகரிக்காது, மரபுநிலை நின்று புதுமையை வரவேற்ற பாரதியின் தெளிந்த நோக்கினைப் புலப்படுத்தி அமைகின்றது.

பாரதியின் சமகாலத்தவராகிய பாவலர் அவர்கள் 1872 யாழ்ப்பாணத்தின் சைவக் குடும்பத்தில் பிறந்து, பின் கல்விக்காக மிசனரியைச் சார்ந்து, இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் தொழில் செய்து, இலங்கைக்கு வெளியே மும்பை போன்ற நகரங்களிலும் வாழ்ந்திருக்கின்றார். அத்துடன் பத்திரிகைத் துறையிலும் ஆளுமை பெற்றவராய் விளங்கியமையினை உதயதாரகை பத்திரிகையில் வெளிவந்த ஆக்கங்களின் மூலம் கண்டு தெளியலாம். பல்வேறு சமூகப் புலங்களில் வாழும் பின்னணியில் இவருடைய சிந்தனை விரிவு ஏற்பட்டது எனலாம். அத்துடன் செமினரியில் படிக்கின்ற காலத்தில் ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளையுடன் ஏற்பட்ட நெருக்கம் - இவருடைய சிந்தனை விரிவுக்கு உதவியது எனலாம்.

இவருடைய காலத்தில் இலங்கை அரசியல் களத்திலே உயர் குழாம்களின் எழுச்சி நகர நிலைப்பட்டதாயும், பிரதேச நிலைப்பட்டதாயும், அரசியற் செல்வாக்கு, சமூக அந்தஸ்து, பொருளாதார வளம் என்பன கொண்டு மேலெழும்புகின்றது. இவற்றிலே பிரதேச நிலைப்பட்ட உயர்குழாமானது - வாழ்க்கை முறைமை, சமூக இலட்சியங்கள், பாரம்பரிய உணர்வு என்பனவற்றில் அதீதமான கவனம் செலுத்தியதாகவும், நகர நிலைப்பட்ட உயர்குழாமானது - தேசிய எழுச்சிக் கருத்தாக்கத்தை முன்னிறுத்திய மரபுணர்வில் நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாகவும் காணப்பட்டது. நகர நிலைப்பட்ட உயர்குழாத்தின் சிந்தனை வழிவந்தோராக பொன். அருணாசலம், பொன்.இராமநாதன் என்போரையும் பிரதேச நிலைப்பட்ட உயர்குழாத்தின் பிரதிநிதிகளாக நாவலர் மரபில் வருவோரையும் குறிப்பிடலாம். பிரதேச நிலைப்பட்ட உயர்குழாத்தின் பிரதிநிதியாகவே பாவலர் அவர்களை நோக்க முடிகின்றது.

மேற்படி உயர் குழாங்கள் தோற்றம் கொள்வதற்கு ஆங்கில, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வாயப்புக்கள் அடிப்படையாய் அமைகின்ற பொழுதிலும், இவர்கள் தமது இருப்பின் எதிர்காலத்தை உணர்ந்து கொண்டபொழுது, தமது மொழி, பண்பாடு, அடையாளம் என்பனவற்றைப் பாதுகாத்துச் சுயகௌரவம் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட இந்திய அரசியலில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, வங்கப்பிரிப்பு, வெளிநாட்டுப் பொருட்களின் பகிஷ்கரிப்பு, சாதிமத வேறுபாடுகள் களையும் உணர்வு, சுதேச மொழிக்கல்வி போன்றன தூண்டுகோலாய் அமைந்த பின்னணியில் எழுந்த 'இலங்கை தேசிய சங்கம்' இதற்கான அடித்தளத்தினைக் கொடுத்தது.

இதன் பின்னணியிலேயே துரையப்பா பிள்ளையவர்கள் சைவமும் தமிழும் என்ற தளத்தில் நின்று சமூக மாற்றத்தை அவாவினார்.

'பாரதியைப் போலவே சமூக அடிமைத்தனங்களுக்கு எதிரான குரலை கவிதையினூடாக ஓங்கி ஒலித்த பாவலரவர்கள் பாரதியைப் போலவே கவிதையை எளிமைப்படுத்தி, பொதுசனங்களுக்கானது என சனநாயகப் படுத்தினார். அவருடைய பார்வையில் அந்நிய ஆதிக்கத்தில் இருந்து சமூகத்தினை விரிவுபடுத்துவதே நோக்கமாக இருந்தது. இதனை யாழ்ப்பாண சுவதேசகும்மியின் அவையடக்கத்தினூடாகத் தெளியலாம்.

***'எவரும் லேசாய் விளங்க இலகு தமிழில்***
***இயம்புவதே நலம்'*****.......** எனவும்.

***'மிக்க அரும்பதத்தோடு புணர்ச்சி***
***மிகிந்திடிற் கும்மி பொதுசனங்கட்கு***
***எக்காலமும் விளங்காததனால் நலம்***
***ஏதுவரும்'*** எனவும் கவிதையை எளிமைப்படுத்தினார். மேலும் கீர்த்தனை, கும்மி போன்ற சனரஞ்சகப்படுத்தப்பட்ட கவிதை வடிவங்களைக் கையாண்டமையும், பாரதியையும் பாவலரையும் ஒப்பிட து... செய்வதாயமைகின்றது. இவ்வாறு கவிதையின் வடிவத்தில் புதுமை புகுத்திய பாவலர் - பெண் விடுதலை பற்றிப் பேசவும் தலைப்பட்டார். அதன் வழி 'கீதரச மஞ்சரி' 'யாழ்ப்பாணத்து சுவதேசக்கும்மி' என்பன மேற்படி கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன.'

பெண்கள் கல்வியிலேயே பாவலர் விடுதலை வேண்டுகின்றார்.

***'பெண்கள் கல்வி முன்னிலும் பன்மடங்கு***
***பெருகிப் பரவுதல் சந்தோஷம்***
***வண்கலை கற்றிடும் பெண்களெம் வீட்டுக்கு***
***வாய்த்த நல் ரத்தினங்கள்...'*** எனப் பாரதி ஒளியாகக் கண்டதைப் பாவலர் இரத்தினமாகக் காண்கின்றார். இவ்வாறு கல்வி கற்ற பெண்ணினமானது பழைய வீட்டடிமை நிலையை ஒழித்து, தலைநிமிரும் எனும் நம்பிக்கையினை -

***'குண்டான் வழித்திடும் பெண்களுக்கு கல்வி***
***கூடாதென்று சொன்ன தக்காலம்***
***பண்பாய் பறந்திடப் பெண்கள் எங்குங்கலை***
***பற்றுகிறாரடி.....'*** எனும் கவிவரிகளினைக் கேட்கும் நேரம் 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிழ்ந்தார்' எனும் பாரதியின் வரிகள் நினைவுக்கு வருகின்றன. மேற்படிக் கருத்துக்கள் பெண்கள் கல்வியில் மேம்பாடடைய வேண்டும் என்ற பாவலரின் கருத்தை வெளிக்கொணர்கின்றன.

ஆனால், ஆண்களைப் போலப் பெண்கள் பட்டங்கள் பெறுவது தேவையில்லை என கூறும் பாவலர் - பெண்கள் கல்விக்கு எனச்சில பாடப்பரப்புக்களை ஒதுக்குவதானது, யாழ்ப்பாண மத்தியதரச் சமூக பார்வைத் தளத்தினூடான சமூக தரிசனமாகவே கொள்ளக்கிடக்கின்றது. இவ்விடங்களில் பாவலர் பாரதியுடன் முரண்படுவது போலத் தெரிகின்றது. 'ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்' எனும் பாரதியின் பெண் பற்றிய பார்வை "ஆண்களைப் போலப் பெண்களுக்கும் சரியாக உயர்கல்வி வேண்டு மெனும் வீண்கதை"... என்ற பாவலரின் கருத்தில் முரண்படுகின்றது. மேலும் 'பட்டங்களாள்வதும் பாரினில் பெண்கள் நடநதவந்தோம்' எனப் பாரதி கூற - பாவலர் 'பி.ஏ எம்.ஏ பட்டம் உதவாது பெண்களுக்கு' என்பதும் அப்படிப்புகள் 'புத்திரரைப் பெற்று வளர்த்திடப் போதுமான பலத்தைப் பழுதாக்குவது' எனக் கூறுவது பாரதியுடன் முரண்படுகின்றது.

பெண்களுக்குத் தேவையாம் கல்வி. இவையிவைதாம் என வரையறுத்து 'பாஷை, கொஞ்சம் கணித அறிவு ஈசனைப் போற்றுமறிவு' என்பன பெண்கட்குப் போதுமானவை எனக் கூறியவர் - கல்வியில் 'எல்லா மனிசர்க்குந் தேவையாஞ் சாத்திரம்... உண்மைகள் நல்லாய் ஸ்திரிகள் கற்றிடவேண்டும்' எனவும் கூறுகிறார்.. பாரதி கூறிய சாத்திரங்கட்குப் புறம்பாகத் தையல், பின்னல், சித்திரம், சங்கீதம் என்பவை அச்சாத்திரங்கள் என்கின்றார்.

மரபு நிலைப்பட்ட சமூகத்தில் பெண்ணுக்குக் கூறியவற்றினையே சில இடங்களில் பாவலர் கூறியமைவதை நோக்க முடிகின்றது.

*'நற்சுவை சேரு முணவு சமைத்திடல்*
*நாயகர் தங்கட் கிதம் புரிதல்*
*சொற்சுவை சேரு நற் பாக்கள்புனைதல'* என பெண் கடமைகளைக் குறிப்பிட்டுச் சொல்லுகின்றார் பாரதி - 'காதலன் ஒருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து' எனக் கூறுவதன் சாயல் இங்கு காணப்படினும் பெண் விடுதலையை வரையறை செய்வது நோக்க வேண்டியது.

மேலும் 'ஆண்களுக்குப் பெண்கள் சமம், மற்றும் பெண்களுக்கான இயல்புகளாகிய மரபுச் சமுதாயத்தின் நாணும் அச்சமும்.. நாய்கட்கு வேண்டும்' எனப் பாரதி கூறப் பாவலரின் கவிதை வரிகளோ -

*'நாண் மட மச்சம் பயிர்ப்பென*
*..... அரும் லட்சணங்கள் சற்றும்*
*பூண்டிலராய் சில நவீன ஸ்திரிகள்*
*புரிசெயல் கேவடி'* என அமைத்தமையானது, பாரதிக்கு நேர் எதிர்மாறாய் அமைகின்றன. 'ஆண்களுக்கும் தமக்கும் என்ன வித்தியாச மென்று ஆருக்கும் அஞ்சாத அகந்தை கொண்டு..... பெண்களால் இந்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கமடையும்' என்பது சமத்துவமின்மையைக் காட்டுகின்றது. மேலும் அவர் தாம் சார்ந்த சமயப் பிடியில் இதற்கு விளக்கமளிப்பதை

*'அத்தினம் மாபரன் ஆண் பெண் எனும் பேதம்*
*ஆக்கி வைத்தானன்றோ'* எனும் கவிதை வரிகளால் தெளியலாம். பெண்கள் தாம் ஆண்களுக்குச் சமமானவர்கள் எனக் கூறுவதானது, மாமடமை எனக் கூறுவது பாரதி பேசிய சமத்துவத்தை நிராகரிப்பதாய் அமைகின்றது.

பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் பார்வையினை நோக்கு பொழுது - கவிதையின் உருவம், உள்ளடக்கம் என்பவற்றில் புதுமையை செய்திருந்தாலும், பிரதேச நிலைப்பட்ட உயர் குழாமின் சிந்தனைகே அவர் கவிதைகளில் இழையோடுவதனைத் தரிசிக்க முடிகின்றது. கை தொழில், விவசாயம், உயர்கல்வி என்பனவற்றில் தேசிய கட்டுமான நோக்கி பிரதேச பண்பாட்டினை மாற்றஞ்செய்ய முற்படினும், சாதி பற்றி கருத்துக்கள், பெண்விடுதலை பற்றிய கருத்துக்கள் என்பனவற்றி மரபுத் தளத்தை விட்டு வெளிவராத போக்கே பெருமளவு காணப்படுகிறது எனலாம். ஏனெனில் 'பெண்கள் கொண்டைக்குப் பூச்சூடுதல், பாதரட்சை யணிதல்' என்பன வழக்கொழிந்த காலம் தமது காலம் என வருந்துகி றார். பாரதி ஒரு பல்லின சமூகத் தளத்தில் நின்று, பாரத சமூகத்தினை மனதில் வைத்து, மரபுத்தளத்தில் நின்று முழுமையாக, புதுமையாக பாடியதனால் பெண்விடுதலைபற்றி மிகக் காத்திரமாக அவனால் சிந்திக்க முடிந்திருக்கின்றது. ஆனால், யாழ்ப்பாண மத்தியதரச் சூழலில் பிரதேச நிலைப்பட்ட பாவலரவர்களால் முற்றாக அதிலிருந்து விடுபட முடிய வில்லை என்பதே யதார்த்தமாகும்.

*- திரு. துரைராஜா ஜீவானந்தவ*
*யாழ். பல்கலைக்கழக மாணவ*

---

***கஜன்:*** எங்கண்ணன் நீர்மூழ்கிக் கப்பலிலே வேலை செய்தவர் சில நாட்களின் முன்னே நிறுத்தப்பட்டுவிட்டார்.

***சுஜன்:*** ஏன்?

***கஜன் :*** புழுக்கமாக இருக்கு என்று ஜன்னலைத் திறந்து விட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் பக்தி (குட்டிக்கதை)

நெல்லையூர் எனும் ஒரு கிராமத்திலே மூன்று நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். மூவரும் மிகுந்த செல்வந்தர்கள். அவர்களில் ஒருவன் கடவுள் மேல் அசைக்க முடியாத விசுவாசமுடையவனாய் இருந்தான். மற்றவன் கடவுள் இல்லையென நாஸ்திக கொள்கையுடையவன். மூன்றாமவன் துன்பம் ஏற்படும் வேளைகளில் மட்டும் இறைவனைத் தியானிப்பான்.

இவர்கள் மூவரும் தங்கள் ஊரிலிருந்து தொலைதூர நாடு ஒன்றுக்குச் செல்லத் தீர்மானித்தனர். அதன்படி தங்களுக்கென்று ஒரு தனி விமானத்தில் இவர்கள் மூவரும் மட்டுமே பயணம் செய்தனர். இவர்களுக்கு விமானம் ஓட்ட நன்கு தெரியும். 5000 அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருக்கும் போது, திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. மூவரும் விமானம் ஓட்டுவது பற்றி அறிந்திருந்த படியால் தனித்தனியாக முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை. விமானம் கட்டுப்பாடற்று மிக வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அப்போது முதலாமவன் - 'இறைவா என்னை இந்த விபத்திலிருந்து காப்பாற்று' என வேண்டினான். இறைவன் மனமிரங்கி அவன் பார்க்கும்படி ஒரு பரசூட்டைக் கொடுத்தார். உடனே அவன் அதைக் கொண்டு தரையில் பாதுகாப்பாகத் தரையிறங்கினான். நாஸ்திகனான இரண்டாமவன் - இந்த விபத்தை ஏற்படுத்தியது கடவுளே என நினைத்து, கடவுளைத் திட்டிக் கொண்டிருந்தான். சற்று நேரத்தில் அவன்கீழே விழுந்து உயிர்நீத்தான்.

அரைகுறையாகப் பக்திகொண்டவனான மூன்றாமவன் - தன்னைக் காப்பாற்றும்படி இறைவனை வேண்டிக்கொண்டே, தரையைநோக்கி விழுந்து கொண்டிருந்தான். வரும் வழியில் அவன் இறைபக்தி கொண்டபடியால் மலையுச்சியிலுள்ள ஒரு கொப்பில் தொங்கியபடி நின்றான். மனமிரங்கிய கடவுள் அவனுக்குத் தரிசனம் கொடுத்தார். இறைவன் அவனிடம் 'நீ என்னிடம் விசுவாசம் வைத்திருக்கிறாயா?' எனக் கேட்க, 'ஆம் உம்மில் ஆழ்ந்த விசுவாசம் வைத்திருக்கின்றேன். என்னைக் காப்பாற்றியருளும்' என வேண்டினான். அதற்கு இறைவன், 'அப்படியானால் கைகளை கொப்பில் இருந்து எடு' எனக் கூற, அவன் ஒருகையை மட்டும் எடுத்தான். மறுபடியும் இறைவன் அவனிடம், 'உனக்கு என்மேல் நம்பிகை இருந்தால் இரு கைகளையும் எடு' எனக் கூறியபோது, 'அவன இறைவனிடம் 'உமக்கு என்ன புத்திபேதலித்து விட்டதா? இரு கைகளையும் எடுத்தால் கீழே விழமாட்டேனா? உம்முடைய இந்த விளையாட்டுக்கு வேறு ஆளைப்பாரும்' என மறுத்து விட்டான். சற்று நேரத்தில் அவன் பிடித்திருந்தகொப்பு முறிந்து கீழேவிழுந்து இறந்து போனான்.

இதிலிருந்து, இறைவன் மேல் சிறிதும் நம்பிக்கை தளராமல் பூரண விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டு வாழந்தால் இறைவன் நம்மைக் கைவிடமாட்டார் என விளங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம்

*(சென்றஇதழ் தொடர்ச்சி)*

தமிழிலக்கிய வரலாற்றை வரன்முறையாக நோக்குபவர்கள் கி.பி பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஒரு தேக்கநிலை ஏற்படுவதை உணர்வர். கி.பி பதினான்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட சோழப் பேரரசின் சிதைவு, பாண்டியர் மேலாதிக்கத்திற்கு வழிகோலியது என்றபோதிலும், பாண்டியர் ஆட்சி நீண்டகாலத்திற்கு நீடிக்கவில்லை. அரசுரிமை தொடர்பாகக் குலசேகர பாண்டியனின் குமாரர்களுக்கிடையில் ஏற்பட்ட தாயாதிக் காய்ச்சலைப் பயன்படுத்திக்கொண்டு மாலிக்கபூர் தலைமையிலான இஸ்லாமியப் படைகள் தமிழகத்தினுள் நுழைந்து, தமிழகத்தின் மேன்மை நிலையைத் தலைகீழாக்கின.

தமிழகத்தில் ஆட்சியை ஏற்படுத்திய இஸ்லாமியர் கடும்பிடியான போக்கைக் கையாண்டனர். இந்துசமயம் நலிவுறும் சூழல் உண்டானது. இந்துக்களின் ஆலயப் பண்பாடு கடுமையான ஆபத்தை எதிர்நோக்கியது.

இந்நிலையில் தமிழகத்தை இஸ்லாமியரிடமிருந்து மீட்டெடுக்கவும், இந்து சமயத்தைக் காக்கவும் வேண்டிய கடப்பாடு, ஆந்திரதேசத்தை ஆண்ட விஜயநகர அரசர்களுக்கு இருந்தது. விஜயநகரப் பேரரசர்களின் பிரதிநிதிகளாகிய நாயக்கர்கள் தமிழகத்திலிருந்து இஸ்லாமியரை அகற்றி விட்டுச் சுமார் நானூறு ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர்.

அடிக்கடி நிகழ்ந்த போர்கள், அரசியல் ஸ்திரமின்மையையும், பொருளாதார உறுதிப்பாடின்மையையும் ஏற்படுத்தின. அத்துடன் இக்காலப் பகுதியில் உண்டான கடுமையான வரட்சியும் பொருளாதாரத்தில் பெரும் தேக்கத்தை உண்டுபண்ணியது. மொத்தத்தில் சோழப் பெருவேந்தர் காலத்திற்கு முற்றிலும் மாறான சமுதாயம் ஒன்று உருவாக மேற்கூறிய அரசியல், சமய, பொருளாதாரப் பின்னணிகள் காரணமாகின.

தமிழிலக்கிய வரலாற்றைப் பொறுத்தமட்டில் அரசியல், பொருளாதார, சமய, சமுதாயப் பின்னணிகள் இட்டுவைத்த தளத்திலிருந்தே இலக்கியம் வெளிக்கிளம்பும். அந்தவகையில் பலமற்ற சமூகக் கட்டுமானங்கள் காணப் பட்ட நாயக்கர் காலத்தின் இலக்கியப் பெறுமானங்களும், சமுதாயத்தின் நிறைகுறைகளைச் சுவறியவண்ணமே வெளிப்போந்தன.

சோழப் பெருவேந்தர் காலத்தையும், நாயக்கர் காலத்தையும் ஒப்பு நோக்கும்போது - முறையே காப்பியங்களின் எழுச்சியும், வீழ்ச்சியும் இடம்பெற்ற காலங்களாக இவை அமைவதைக் காணலாம். சோழப் பெருமன்னர் காலத்தில் நிலவிய அரசியல் ஸ்திரம், பொருளாதார மேம்பாடு, வாழ்வியல் வளம், சமயங்களின் வளர்ச்சி, பேரரசருக்கும் - புலமைச் சமூகத்திற்மான ஆரோக்கியமான உறவு போன்றவைகள் வளமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பியங்களும், அழகு பொலியும் சிற்றிலக்கியங்களும் தோன்ற வழிவகுத்தன.

நாயக்கர் காலத்தில் மேற்கூறிய சுமுகமான நிலவரங்கள் இல்லாமற் போனமை காப்பியங்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. நாயக்கர்களின் கவனம் இந்து மதத்தையும், இந்துக் கோயில்களையும் பாதுகாக்கின்ற நோக்கிலேயே அமைந்திருந்தது. அரசர்களின் நீடித்த ஆதரவின்மை, பொருளாதாரப் பின்னடைவு, அலயங்களின் மகிமைபற்றிய பிரசாரத் தேவை, சமயத் தேவை என்பன சிற்றிலக்கியங்களையே தோற்றுவிக்கக்கூடியனவாக அமைந்தன.

பொதுவாக நாயக்கர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள் இந்துசமயப் பொருள் மரபுடன் இயங்குவனவாகவே அமைகின்றன. இஸ்லாமிய் மேலாதிக்கத்திலிருந்து இந்து சமயத்தை மீட்டெடுப்பதில் இச் சிற்றிலக்கியங்கள் ஆற்றிய பணி அளப்பரியது. இதன் ஒரு பகுதியாகவே இந்துக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்த வடிவங்களைச் சுட்டலாம். நாயக்கர் காலத்தில் உலா, கோவை, பிள்ளைத் தமிழ், கலம்பகம், இரட்டை மணிமாலை, முதலாம் பிரபந்தங்கள் தமிழகத் தலங்களின் அருமை பெருமைகளை விதந்துரைக்கப் பயன்பட்டன. கச்சிக்கலம்பகம், காசிக்கலம்பகம், தில்லைக் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா, திருவாரூர் உலா, மதுரைச் சொக்கநாதர் உலா, சேவூர் முருகன் பிள்ளைத்தமிழ், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருவாரூர் மும்மணிக்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை போன்றன இத்தொடர்பில் சுட்டத்தக்கன.

மேற்கண்ட பிரபந்தங்கள் மாத்திரமன்றி மாலை, பரணி, அந்தாதி, சதகம், புராணம் முதலிய பிரபந்த வடிவங்களும், தனிப்பாடல் வடிவமும் நாயக்கர் காலத்தில் கையாளப்பட்டன.

பரணி என்னும் பிரபந்தம் சோழப் பெருமன்னர் காலத்தில் தமிழிலக்கியப் பரப்பினுள் நுழைந்தது. ஆளும் வர்க்கத்தைத் துதிபாடும் மரபு மேலோங்கிக் காணப்பட்ட சோழப் பெருவேந்தர் காலத்தில், பேரரசரைப் போற்றிப் பாடுவதற்கு வாய்ப்பான இலக்கிய வடிவமாகப் பரணி திகழ்ந்தது. "ஆயிரம் யானையை அமரிடை வென்ற மாவீரனுக்கு வகுப்பது பரணி" என்பது பரணிக்குரிய இலக்கணம். எனினும் நாயக்கர் காலத்தின் அரசியல், பொருளாதார, சமய பகைப்புலங்களால் பரணியின் பொருள் மரபு மடைமாறி ஓடுவதைக் காணலாம். நாயக்கர் காலத்தில் தத்துவப் பாங்கான நகர்வுடன் "மோகவதைப் பரணி", "பாசவதைப் பரணி", "அஞ்ஞவதைப் பரணி" என்பன தோன்றின. நாயக்கர் காலத்தின் தத்துவப் போக்கிலமைந்த இலக்கியப் பண்பிற்கு இவை பதச்சோறாக அமைகின்றன.

நாயக்கர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களின் குறிப்பிடத்தக்க பண்பு, வித்துவத்தன்மையுடன் அமைந்தமையாகும். வறுமையும், ஆதரவின்மையும் தூண்டிவிட்ட போட்டி மனப்பான்மையால் புலவர்கள் வித்துவத்தன்மையையும், வார்த்தை ஜாலங்களையும், சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரங்களையும் தமது செய்யுள்களில் முதன்மைப்படுத்தினர். ஆசுகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி போன்ற கவிகள் தமது புலமைச் செருக்கை அச் செய்யுளில் வெளிப்படுத்தினர். இதற்கேற்றவகையில் யமகம், திரிபு, மடக்கு போன்ற கடினமான செய்யுள் வடிவங்களும் பின்பற்றப்பட்டன. நீரோட்டமாக அந்தாதி இதற்குப் பொருத்தமான உதாரணமாகும். இப்பண்புகளைக் காளமேகப் புலவர் முதலானோரின் தனிப்பாடல்களிலும் காணமுடியும்.

இக்காலத்தில் சுட்டிக்காட்டக்கூடிய பிறிதொரு பண்பு சந்தக் கவிபாடும் பண்பாகும். சந்தக்கவி பாடுவதில் அருணகிரிநாதர், திரிகூடராசப்பர், குமரகுருபரர் போன்றோர் வல்லமை காட்டினர். பல்லவர் காலத்தில், திருஞானசம்பந்தரின் பதிகங்களில் காணப்பட்ட சித்திரக்கவிப் பண்பினை நன்கு உள்வாங்கியதாக அருணகிரிநாதரின் சந்தப் பண்பு திருப்புகழில் மேற்கிளம்புகின்றது.

இக்கட்டுரையில் குறிப்பிடவேண்டிய இரண்டு செல்நெறிகளை நாயக்கர் கால இலக்கியமரபில் காணலாம். ஒன்று, செய்யுட் பாரம்பரியத்தில் இறுக்கமாகப் பேணப்பட்ட செந்நெறிப் போக்கு, மற்றது நாட்டார் இலக்கியப் போக்கு, நாயக்கர் காலத்தில் குறவஞ்சி, பள்ளு முதலிய பிரபந்தங்கள் நாட்டார் இலக்கியப் போக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தின. குற்றாலக்குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, செண்பகராமன் பள்ளு என்பன இப்போக்கிலமைந்த இலக்கியங்கள். சொல்ஜாலம், சிருங்காரம், சந்தம் என்பனவற்றை இவற்றில் காணலாம்.

நாயக்கர்காலத்தில் விருத்தம், வெண்பா போன்ற பாவடிவங்களும், கவித்தாழிசை போன்ற பாவினங்களும், யமகம், திரிபு, மடக்கு முதலிய செய்யுள் வடிவங்களும் பின்பற்றப்பட்டன. வடமொழி விரவ மொழிநடையை இவ்விலக்கியங்கள் கொண்டு நகர்ந்தன.

மேலும் இக்காலப் பகுதியில் பழந்தமிழிலக்கணங்களுக்கான உரைகளும் வகுக்கப்பட்டன. சிவஞானம் முனிவர், வைத்தியநாத தேசிகர் போன்றோரின் உரைகள் இங்கு சுட்டத்தக்கன.

கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழிலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம் சுவாரஸ்யமான பன்முகப்படுத்தப்பட்ட ஆய்வுகளுக்கு இடமளிக்கக்கூடியது. விரிவஞ்சி இக்கட்டுரை சுருக்கமாக அமைந்தது என்பது இங்கு கூறத்தக்கது. –

**என் தாகூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவிப் பெட்டியில் இருக்கவேண்டியவை

விபத்து என்பது நாம் எதிர்பாராது நடப்பது. வீட்டிலாயினும், வெளியிலாயினும் நாம் அவதான மாகக் காரியங்களை மேற்கொண்டால் பல விபத்து களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

நமது கிராமங்களில் மட்டுமல்லாது, நகரங்களிலும்கூட வீடுகளில் ஒரு சிறு காயத்திற்கு கட்டுப்போடக்கூடியதாக கட்டுத்துணியோ, பிளாஸ்ட ரோ, பஞ்சோகூட இல்லாதிருப்பதை நாம் அறிய முடிகின்றது.

முன் எச்சரிக்கை நடவடிக்கைகளில் நாம் அதிக ஈடுபாடுகொள்ளா மையே இதற்குக் காரணமாகும். மின்சார வேலை செய்பவர்கள் தம் தொழிற்கூடங்களில் எத்தனையோ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கற்றிருந்தாலும், தொழிற்படும்போது அவற்றை உதாசீனம் செய்துவிட்டு மிகவும் ஆபத்தான மின்சாரப் பொருத்துகளை அநாயாசமாக எவ்வித கையுறை களையும் போட்டுக்கொள்ளாமலே செய்து முடிப்பதை நாம் அடிக்கடி கண்டு வருகின்றோம்.

உலோக வேலைகளைச் செய்பவர்கள் பலர் தங்கள் கண்களுக்கு அணியவேண்டிய பாதுகாப்பு அணிகளை அருகில் வைத்துக்கொண்டே அவற்றைப் பயன்படுத்தாமல், தீப்பொறி பறக்கும் திகிலூட்டும் வேலைகளைக் கவலையின்றிச் செய்துவருகிறார்கள். வீடுகளில் பொறுப்பற்ற விதத்தில் தாய்மார்கள் செய்யும் பல வேலைகள் அவர்களது குழந்தைகளின் எதிர்காலத் தையும், சில சமயம் வாழ்வையும் பாழ்படுத்தி விடுகின்றன.

அரசினர், தனியார் வைத்தியசாலைகளுக்கு நாள்தோறும் வந்துசேரும் விபத்துக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை, இத்தகைய கவனயீ னங்களைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

விளையாட்டுப் பொருளாகச் சிறுவர்களுக்குக் கூரிய ஆயுதங்களைக் கொடுப்பதும், நச்சுத்தன்மையான பொருட்களைக் குழந்தைகளின் கைக்கெட்டும் இடத்தில் வைத்திருப்பதும் ஆபத்தானது.

சிறிய காயங்கள் தானே என்று உடனடியாக மருந்திடுக்கொள்ளாமலும், உரிய வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை பெறாது தாமதிப்பதானாலும் பின்னர் அதன் பிரதிபலனை மோசமாக அனுபவிக்கநேரிடும்.

வருமுன் காப்பது புத்திசாலித்தனமாகும். எனவே வீடுகளில் சிறுவர் களுக்கு மிகவும் தெளிவாக அறிவுரைகள் மூலம் சுயபாதுகாப்புப் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களைத் தெரிவிக்கவேண்டியது ஒவ்வொரு குடும்பத் தலைவர்களினதும் கடமையாகும்.

வீட்டுக்கொரு முதலுதவிப் பெட்டி வைத்திருக்கவேண்டியதன் அவசியத்தை எம்மில் பலர் இன்னமும் அறிந்துவைத்திராதது அவர்கள் அறியாமை மட்டுமல்ல, அக்கறையின்மையுமாகும்.

நாம் முன்யோசனையாக இருந்தும் சில விபத்துகள் நேரிடக்கூடும் அவற்றைச் சமாளிக்க எமக்குக் கைவசம் ஒரு சிறு பெட்டியில் மிகவும் எளிதாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய சில முதலுதவி உபகரணங்களும், மருந்துகளும் தேவை. அவற்றைப் பயன்படுத்தும் அறிவையும் நாம் பெற்றிருத்தல் வேண்டும். அவற்றைக் குடும்பத்தின் பிற அங்கத்தவர்களும் தெரிந்து கொள்வதற்கு இடமளித்தலும் வேண்டும்.

வீட்டில் எமது அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படத்தக்க சில மருந்துவகைகளையும், பிற உபகரணங்களையும் கீழே தந்திருக்கின்றோம். தேவைப்படும் அளவும் குறிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தயார்நிலையில், குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும்.

1. கட்டுத்துணி 3" அகலம் 36" நீளம் 5 சுருள்.
   2" அகலம் 36" நீளம் 5 சுருள்.
   1" அகலம் 36" நீளம் 5 சுருள்.
2. காயக்கட்டு 2" அகலம் 2" நீளம் 20 துண்டு (தொற்றுநீக்கப்பட்டு, பொலித்தின் உறைபோட்டு, ஒட்டப்பட்டிருத்தல் நன்று)
3. முக்கோணக் கட்டுத்துணி 3
4. சிம்புகள் ½" x 4" x 30" 5
   ½" x 3" x 4" 10
5. சேர்ஜிக்கல் ஸ்பிரிட் (Surgical Spirit) 50 மில்லி லீற்றர்
6. சவலோன் (Savalon) அல்லது டெட்டோல் (Dettol) ஒரு சிறிய போத்தல்
7. பிளாஸ்டர் 1" சுருள்
8. ஊசி (Safety Pin) 10
9. பஞ்சு - சிறு உருண்டைகளாகச் செய்து பத்து உருண்டைகள் வீதம் பொலித்தின் உறையில் அடைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. கத்திரிக்கோல் 5" நீளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அ'வில் தொடங்கும் பழமொழிகள்


01. அற்பனுக்கு மவுசு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்.
02. அற்ப ஆசை கோடிதவத்தைக் கெடுக்கும்
03. அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி
04. அறையில் ஆடியல்லோ அம்பலத்தில் ஆடவேண்டும்.
05. அறிந்தறிந்த செய்யும் பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்.
06. அறுபத்து நாலடிக் கம்பத்திலேறினாலும் அடியிறங்கித்தான் காசு வாங்க வேண்டும்.
07. அளக்கிற நாழி அகவிலையறியுமா?
08. அழகிருந்தென்ன அதிர்ஷ்டம் இருக்க வேண்டும்.
09. அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்.
10. அழுதாலும் பிள்ளையை அவளே தான் பெறவேண்டும்.
11. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
12. அழகேசன் ஆனாலும் அளவறிந்து செலவு செய்ய வேண்டும்.
13. அவள் பேர் கூந்தலழகி, அவள் தலை மொட்டை.
14. அழச் சொல்லுவார் தமர் சிரிக்கச் சொல்லுவார் பிறர்.
15. அடித்த கொள்ளையில் குதிரை மேய்த்தாலென்ன கழுதை மேய்த்தாலென்ன.
16. அலை எப்போ ஒழியும் தலை எப்போ முழுகுவது.
17. அவப் பொழுதிலும் தவப் பொழுது நல்லது.
18. அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்.
19. அவசரகாரனுக்கு புத்தி மட்டு.
20. அருமை வந்த வீட்டில் எருமை குடியிருக்காது.
21. அரைக் காசுக்குக் கவிழ்ந்த கற்பு ஆயிரம்பொன் கொடுத்தாலும் வாரது.
22. அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி.
23. அரைக்காசுக்குக் குதிரையும் வேண்டும். ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.
24. அரிசி ஆழாக்கு ஆனாலும், அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்.
25. அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும், புறத்தி புறத்தி தான்.
26. அப்பன் எட்டடி பாய்ந்தால், பிள்ளை பதினாறு அடி பாய்வான்.
27. அறுந்த மூக்கு அழுதாலும் ஒட்டாது.
28. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.
29. அழுதபிள்ளை பால் குடிக்கும்.
30. அழையா விருந்துக்கு நுழையாதே.
31. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
32. அன்னநடை நடக்கப்போய் காகம் தன்னடையும் கெட்டது.
33. அரபிக் குதிரையானாலும் பிறவிக்குணம் போகாது.
34. அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது.
35. அடினும் ஆவின் பால் தன் சுவை குன்றாது.
36. அம்மான் பிள்ளையானாலும் சும்மா வராது.
37. அடிக்கும் கைதான் அணைக்கும்.

*S.கிறிஷாந்தி*
*ஆண்டு 11*
*விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்



ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியார்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானும் ஒருவர். தீந்தமிழ், பைந்தமிழ் என்றெல்லாம் புகழ்ந்து பேசப்படுகின்ற தமிழ்மொழியானது மிகவும் இனிமை பயக்கின்ற ஓர் அமுதமொழியாகும். தமிழ் தமிழ் என்று தொடர்ந்து சொன்னால் அது அமிழ்து அமிழ்து என்றே கேட்கும்.

அத்தகைய பெருமைவாய்ந்த தமிழ்மொழியை வளர்க்கவேண்டும் என்று தன்னையே முற்றுமுழுதாக அர்ப்பணித்து அரும்பாடுபட்டவர் நாவலர் பெருமான் அவர்கள். 1822 இல் நல்லூரிலே அவதரித்த நாவலர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார்.

இந்தியாவிலுள்ள திருவாவடுதுறை ஆதீனத்தால் 'நாவலர்' என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்ற இவர் விவிலிய (பைபிள்) நூலை மொழி பெயர்த்தவர்.

இருபாலை சேனாதிராயர், நல்லூர் சரவணமுத்துப் புலவர் முதலானோரிடம் தமிழ்கற்ற இவர் - குருகுல முறைப்படி வாழ்ந்து இலக்கண இலக்கியங்களையும் இதிகாசங்களையும் காவியங்களையும் சமய சாத்திரங்களையும் சைவக் கோட்பாடுகளையும் ஐயந்திரிபறக் கற்றார். பின்பு யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் சேவையாற்றினார்.


இந்தியாவிலிருந்து அச்சியந்திரங்களை வரவழைத்து, அச்சுக்கூடங்களை நிறுவி, பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். பாடசாலை ஸ்தாபித்து கல்விச் சேவையும் புரிந்தார். சைவ சமய அனுட்டானங்களை நெறிப்படுத்தி, சமய தீட்சையும் செய்து வைத்தார். கதாப்பிரசங்கம், புராணபடலம், ஆராய்ச்சி என்பவற்றையும் மக்களிடையே பரப்பினார்.

தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழுக்கும் சைவத்துக்குமே அர்ப்பணித்த நாவலர் 1879 கார்த்திகை மக நட்சத்திர நன்னாளில் இறைபதமடைந்தார். இவரது தமிழ்ப்பணி, கல்விப்பணி, சமயப்பணி,சமூகப்பணி பற்றிச் சொல்லி முடியாது. இவற்றுக்காகவே வாழ்ந்து காட்டிய இந்நாவலரை நாம் நினைவு கூர்வதோடு அவரது பணிகளை நாமும் முன்னெடுத்துச் சேவை மனப்பான்மையோடு கடமையாற்ற வேண்டும். இன்றைய காலகட்டத்தில் அவரைப் பின்பற்றுவதே நமது பாரம்பரிய கடமை.

*சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் பக்கம்

அறிவை வளர்க்கும் மிகச்சிறிய அறுவடையே, உனது ஆற்றல் அறிவைப் பரப்ப எல்லோரும்விரும்பும் அளவிலும், பெரிதாகி விரைவில் அனைவரது கைகளிலும் தவழ எனது வாழ்த்துக்கள்.

**S.நிவேதா**
**சுதுமலை**

**ஆசிரியரே!**

அறுவடையை ஏனைய சஞ்சிகை மாதிரி இடைநடுவில் விடாமல் தொடர்ந்து உன் பணி சிறந்து நீ நீடூழிவாழ வாழ்த்துகிறேன.

**ஆ.தயாளினி**
**மானிப்பாய்.**

அன்பின் அறுவடையே - நீ
அன்பின் சின்னமாய்
அறிவின் சிகரமாய்
இருளில் ஒளியாய்
அவதரிக்க எந்நாளும்
என் வாழ்த்துக்கள்.

**S.ராஜ்குமார்**
**பருத்தித்துறை.**

***அறுவடையே!***

நீ மாணவர்களாகிய எமக்குமட்டுமல்லாது, எமது பெற்றோர், அறிவாளிகள், சிறுவர்கள், அனைவரும் விரும்பி வாசிக்கும் வகையில் வருகிறாய். இன்னும் சிறந்து வளர நல்லாசிகள.

**S.கலா**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்ரல் சென்றர்

## நெல்லியடி

A/L
2008

கலை, வர்த்தகம், கணிதம்,
விஞ்ஞானம் ஆகிய பாடங்
களுக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பமாகிவிட்டன.

எமது வழமையான ஆசிரியர் குழு

விசேட ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன
(அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படுகின்றன)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னவன் *(சிறுகதை)*

கடல் என்றும் நீலமாகத்தானிருந்தது. ஆனால் மாலாவின் கண்களுக்கு மட்டும் அது செங்கடலாகக் காட்சியளித்தது. கூடையில் கொண்டுவந்த மலர்களை அள்ளி, அந்த... குட்டிப் பிள்ளையாரிடம் சென்றாள். பூக்களைக் கணபதிக்குக் கொடுத்துவிட்டு, கண்ணீர் நிரம்பி வழிய அவள் அசையாமல் வெறித்தபடி நிற்கின்றாள். ஏதோ வெறுப்பு, விரக்தி, ஏதோ விண்ணப்பம், கோபம் கலந்த மன்றாட்டம் என அவள் விழிகள் விநாயகனிடம் கதைகள் பேசின. அலை வீசும் கடலை நோக்கி நடந்தாள். செங்கடலினைப் பார்ப்பதில் அவளுக்கு எத்தனை ஆறுதல். நேரம் நகர வீட்டை நோக்கி நடந்தாள்.

எண்ணற்ற எதிர்பார்ப்புகளுடன் பதினைந்து வருடங்களுக்குப் பின்பு தன் ஊரை, உறவுகளைக் காணப்போகும் அவாவில் வந்துகொண்டிருந்தான் விக்னேஸ். வீடும் வந்தது. அம்மா, அக்கா, தங்கைமார், புதிய உறவுகள் எல்லோரும் ஆசையுடன் வரவேற்றனர். வந்த களைப்பு மாறிய பின் பக்கத்து வளவில் இருந்த சிறிய வைரவர் கோயிலடியைக் காண விரைகின்றான். அவன் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகியது. "எங்கை... எங்கை இதில இருந்த ஆலமரம்?" அவன் பதறியபடி கேட்கிறான். தங்கை சாதாரணமாக "அது எப்பவோ ஷெல் விழுந்து பட்டது போக மிச்சம் தறிச்சுப் போட்டாங்கள்" அவனுக்கு அந்த மண்ணில் விழுந்து, புரண்டு, அழத்தோன்றியது. கோயிலில் பிரசாதத்திற்கு மார்கழி மாதத்தில் அடிபடுவதும், வெள்ளத்தில் விளையாடுவதும், ஆலமர விழுதில் ஊஞ்சலாடுவதும் இப்போது அவனுக்கு நிழலாடியது. நாட்கள் கடந்தது. மருமக்களுடன் ஆசைதீர விளையாடினான். அக்கா, தங்கைகள் வாழ்வு திருமண பந்தத்தில் கரையேறியதன் சந்தோஷத்தையும், அதை நிறைவேற்றிய தன் வெளிநாட்டுப் பணத்திற்கான நன்றியையும் தாய் முகத்தில் கண்டு கொண்டான்.

எல்லாம் சரிவர நடந்து முடிந்துவிட்டதாலோ என்னவோ அவனுக்கு நாட்கள் நகர, வீட்டில் மதிப்புக் குறைந்தது. இப்போது அவன் தனி மரம். அன்னை இல்லையேல் அவன் பாடு...? அவனுக்கு "இவர்களா என் சகோதரிகள்?" என்று வெறுப்புத் தோன்றியது. அவன் ஞாபகங்கள் தன் பழைய நட்புறவுகளுக்காக ஏங்கியது. ஆனால் அவர்கள் எங்கே? இவன் எங்கே? மனம் சுழலவே மோகன் நினைவு வந்தது. பொறுப்பற்று சுற்றித்திரிந்த அவனிற்கு அறிவுரை கொடுத்தவன் அவன். "டேய் அப்பா இல்லாத உன்ர குடும்பத்தைக் காப்பாற்றவேண்டியது உன்ர பொறுப்படா சும்மா நாடு, மக்கள், சமூகம் எண்டு வெட்டித் தனம் வேண்டாமடா. முதல் குடும்பத்தைப் பார். பிறகு மிச்சத்தைக் கவனிக்கலாம்." மோகன் சொன்னது அவன் காதில் கேட்டது. உடனேயே புறப்பட்டான் மோகன் வீட்டிற்கு. வீடும் நெருங்கியது. மோகனின் தாயார், வந்து கதவைத் திறக்கின்றாள். விக்னேஸைக் கண்ட அவள் விழிகளில் பரவசம். பரவச ஒளி திடீரென மறைய விழிகள் கலங்கின. அவள் முகம் சோகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. "அம்மா என்னைத் தெரியுதே எங்கயம்மா மோகன், மாலா ஒருத்தரையும்... காணேல்ல... வீடு... வெறிச்சோடிப்போயிருக்கு" கேட்டபடியே வீட்டிற்குள் ஏறிய அவனது விழிகள் அசையாமல் நின்றன. பிரமை பிடித்த அவன் முகத்தில் விழிகளிலிருந்து நீர் ஓடியது. "மோ... மோகன்... தெ... தென்னவன் எண்ட பெயர், உனக்குத் தானடா? அப்பவும் பேப்பரில் தென்னவன் எண்ட பெயர் எங்கட ஊரில யாருக்கு? யார் அப்படி சூட்டிற்குப் பலியாகி வீரமரணம் பெற்றது? எண்ணி எண்ணித் தோற்று, கவனத்தில் எடுக்காமல் மறந்தே விட்டேன்... அது நீயா? மோகன்!" அவனுதடுகள் அவனை அறியாமல் உச்சரித்தன. தாய் சத்தமிட்டு அழுதாள். "டேய் அதே சிரிப்பு, அதே பார்வை இதை இப்படி மாலையுடன் போட்டோவில்தான் நான் காணவேண்டும் என்று நினைத்துத்தானா என்னை வெளிநாடு அனுப்பினாய்? உன் சாவினருகில் இருக்கும் பாக்கியம்கூட இல்லாத நண்பனடா" அவன் உள்ளம் கனல் எனச் சுழன்றது. "மோகா நீ சென்ற இடம் நானும் செல்வேன். எனக்கென்ன கவலை இனி இருக்கிறது...?" அவனுள்ளம் சொல்லி முடிக்கையில் மாலா வருகிறாள். வந்தவள் தன்பாட்டில் அறைக்குள் நுழைகிறாள். "அட விக்கி! விக்கி! என வாய்க்கு வாய் அழைக்கும் மாலாவா இவள்? மோகனை விட்டுக்கொடுத்தாலும் என்னைக் குறை சொல்ல விடமாட்டாள்" அவன் நினைக்கின்றான்... ஒருநாள் மோகன் கூறியது தெளிவாக அவன் காதில் ஒலிக்கிறது. "டேய் எனக்குத் தெரியுமடா மாலா எனக்கொன்று நடந்தால் துடிப்பதைவிட உனக்காகத் துடிப்பாளடா. நீயே சொல்லு... என்னைவிட உனக்கு அவள்தானே பெரிசு" அவன் சிந்தனையைக் குழப்பிய தாய் "என்ன தம்பி செய்யிறது? மோகன் போன அதே மாதம்தான்... படிக்கப் போனவள் சோதனைச் சாவடியில நடந்த அந்தச் சம்பவத்தால பதறியடிச்சுக்கொண்டு வீடு வந்தவள்தான்! ஒருவரோட சரியாகப் பேசுறதில்லை, சிரித்துக் கதைப்பதில்லை. ஆக பூக்கூடையோடை கடற்கரைப் பிள்ளையாரிட்டைப் போவதும், மோகன் போன அந்தக் கடலை வெறிச்சுப் பார்த்து; இருந்துவிட்டு வருவதும்தான் அவளுக்கு வேலையாய்ப் போச்சு! போன கிழமைதான் ஒரு நல்ல சம்பந்தம் ஒன்று வந்திச்சு. அதையும் யாரோ அவள் ஒரு போக்கு எண்டு சொல்லிக் குழப்பிப் போட்டாங்கள். ம்... ம் என்ன செய்யிறது. தம்பி என்ர விதி. "விக்னேஸ் உள்ளம் சுழன்றது. அவனது அன்பிற்கு உரிய மாலாவுக்கா இந்த நிலை..." அம்மா... நீங்கள் கவலைப்பட வேண்டாம்... மாலாவுக்கு நல்ல வாழ்க்கையைத் தர, அவளை எங்கட பழைய மாலாவாக மாத்த என்னால முடியும் அம்மா..." மோகன் கூறிமுடிக்க தாயின் முகம் இனிதே ஆனந்தக் கண்ணீருடன் மலர்ந்தது. மோகனின் படத்தை நோக்குகிறான். மோகன் அவனை தினம் மாலாவின் பெயரைச் சொல்லி கிண்டல் செய்யும் தோரணை விக்னேஸ் கண்களில் விரிகிறது. "என்னதான் இருந்தாலும் டேய் உனக்கு மட்டும்தான் உபதேசம் ஊருக்கில்லை என்று என் பாதையைத் திருப்பி விட்டுவிட்டு அந்த வழியில் நீ மட்டும் நடந்தது நியாயம்தானாடா?" விக்னேஸ் உள்ளம் மோகனின் திருவுருவத்தைப் பார்த்துக் கண்ணீர் மல்கக் கேட்டுக்கொள்கின்றது!

*தி.அன்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை சந்தா மாதிரிப்படிவம்

அறுவடை சஞ்சிகையினை நான் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக (தபால் செலவு உட்பட)

ஆறுமாதம் ☐ ஒருவருடம் ☐ இரண்டுவருடம் ☐
ரூபா 180 ரூபா 360 ரூபா 720

செலுத்துகிறேன்.

**பெயர்:**..............................................

**முகவரி:**..............................................

..............................................

**தொலைபேசி:**..................................

நான் இத்துடன் ....................................இலக்க காசுக் கட்டளையை "அறுவடை" என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

........................ ..................................

**திகதி** **கையொப்பம்**

---

குறிப்பு: பணத்தினை நேரிலோ அல்லது காசுக்கட்டளையாகவோ அறுவடை என்ற பெயருக்கு யாழ்ப்பாணம் தபாலகத்தில் மாற்றத்தக்கதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். எமது நிறுவனத்துடன் நேரடியாகவும் பதிவு செய்யலாம்.

***அறுவடை***
***சமூக அறிவியல் ஏடு***
***180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.***

---

## உங்களுடன் நாம்

வாசக பிரியர்களே! தங்களுடைய ஆக்கங்களும் அறுவடையில் வரவேண்டுமா? அப்படியானால் நீங்கள் செய்ய வேண்டியது. உங்கள் எண்ணங்களில் தோன்றும் அபிப்பிராயங்களையும், ஆக்கங்களையும் எமக்கு அனுப்பிவைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி.

"அறுவடை"
180, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி

இல-02

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 தா | | | | 4 த | | X | 3 ரை | 10 |
| 6 தா | | | | X | 5 ஞ் | | 18 அ | | |
| | | X | X | 7 அ | | | | | |
| X | 9 சு | 17 த | 19 ந் | | | X | | X | X |
| 8 ப | | | | | X | | | X | X |
| | | | | X | | | | X | 15 வி |
| | X | | | | | | X | 16 லா | |
| 14 ம | 20 க | | | X | 11 வி | | | | |
| | | | X | X | | | | X | |
| X | | X | 12 வ | | | X | 13 வை | | |

**இடமிருந்து வலம்:**

1) வணக்கத்துக்குரிய பாதங்கள்
3) கால்நடைகள் உண்டபின் மீட்பது - (திரும்பியுள்ளது)
5) மை (குழம்பியுள்ளது)
6) கற்பகமரம் - (குழம்பியுள்ளது)
7) வேகமின்றி செயற்படுதல்
8) இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்
9) அழகு - (குழம்பியுள்ளது)
11) தமிழ் நாட்டின் எல்லையிலுள்ள மலை
12) இது பயிர் விளையும் இடம்.
13) வீட்டின் பின்புறம் - (திரும்பியுள்ளது)
14) ஒரு இராசி
16) பிதாமகன் இயக்குனர்- (திரும்பியுள்ளார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிருந்து கீழ்:

1) சாளுக்கியர் தலைநகர்
2) சூரபத்மனின் தம்பி
4) அபயம்
7) சிவன்
8) கே.டானியலின் ஒரு நாவல்
10) இலக்கணப் பிரிவு
15) மழைபெய்யாவிட்டால் - இதனை எரிப்பர்
17) நாட்டுக்கு அவசியமானது - (குழம்பியுள்ளது)
18) ஒரு தீவுக் கூட்டம்
19) பலசரக்குப் பொருட்களில் ஒன்று
20) மாலை

இக்குறுக்கெழுத்துச் சட்டகத்தைப் பூரணமாக்கி நேரிலோ தபால் மூலமாகவோ 30.02.2006 இற்கு முன்னதாக எமக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**அனுப்பவேண்டிய முகவரி**

***அறுவடை***
***குறுக்கெழுத்துப் போட்டி இல 02***
***180, பருத்தித்துறை வீதி,***
***யாழ்ப்பாணம்.***

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது
**முதல் பரிசு** 500/=
**இரண்டாவது பரிசு** 300/=
**மூன்றாம் பரிசு** 200/=

இப்போட்டியில் தமிழ் செய்தி தகவல்மையம், மானிப்பாய் றோட்டறட் கழகம் என்பவற்றின் அங்கத்தவர்கள், உறவினர்கள் கலந்து கொள்ள முடியாது.

பெயர்: ..........................................................................................

வதிவிட முகவரி:..................................................................................

இப்போட்டிக்கான பரிசுகளை மானிப்பாய் றோட்டறட் கழகம் வழங்கும்.

குறுக்கெழுத்துப் போட்டி 1 இன் முடிவுகள் அடுத்த இதழில் வெளியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியின் மகத்துவம்

மாதங்களில் சிறந்தது மார்கழி, வருஷத்தை நாலாகப் பிரித்தால் உத்தராயணத்துக்கு முந்திய உஷத் காலத்தில் மார்கழி மாதம் வருகிறது. தேவர்களுக்கு ஆடிமுதல் மார்கழி ஈறாக இரவும், தை முதல் ஆனிவரை பகலும் நிகழும். ஆகவே இது மகிமையும் புனிதமும் பெறுகிறது.



திருவெம்பாவை, திருப்பாவை பூஜைகளும் இந்த மார்கழியிலேயே நடைபெறுகின்றன. பக்குவமுடைய ஆன்மாக்கள் ஆணவ இருள் நீங்கி இறையாசியுடன் திருவருள் சேர இது உகந்த மாதம்.

சூரியோதயத்துக்கு முன்பாக எழுந்து புனித நீராடி, சந்தியா வந்தனஞ் செய்து சிவாலய தரிசனம் புரிந்தால் நன்மைகள்பல விளையும்.

மனிதப்பிறவி கிடைத்தற்கரிய புனிதப் பிறவி. இது இருக்கும் போதே நாம் நல்ல காரியங்களையெல்லாம் செய்துவிட வேண்டும். அதற்காக இந்த மார்கழியைப் பயன்படுத்தல் தகும்.

இந்த மார்கழியில் எல்லாத் தேவாரங்களையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் மட்டுமே ஓதுதல் நமது ஆன்றோர் மரபு.

கன்னிப்பெண்கள் எல்லோரும் இம்மார்கழி நோன்பை முறையாக அனுஷ்டித்தால் நல்ல வரன் கிடைக்கப் பெற்று இல்லறம் சிறக்குமென்று நமது முன்னோர் கருதினர். ஆகவே தமிழ்மக்களாகிய நாம் இன்னல்கள், இடுக்கண்கள் நீங்கப் பெற்று, சந்தோஷமான மகிழ்ச்சியும், இன்பமும் நிறைந்து விளங்கும், ஆனந்தமயமான நல்வாழ்வு வாழ்வதற்கு இந்த மார்கழி வழிபாடே வழிசமைத்துக் கொடுக்கும்.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம்" என்று திருப்பாவையில் ஆண்டாளும் மார்கழி நீராடேலோரெம்பாவாய் என்று திருவெம்பாவையில் மணிவாசகரும் கூறியிருப்பதை நாம் கவனத்தில் எடுத்தல் வேண்டும். இந்த மார்கழியை நல்ல முறையில் பயன்படுத்தி நல்வாழ்வுக்கு அத்திவாரமிட நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

*- சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடையின் விளம்பர விபரம்

| | | |
|---|---|---|
| முன்புற உள்பக்க வர்ணம் | – 2500/= | 14 x 20 Cm |
| பின்புற அட்டை வர்ணம் | – 3000/= | 14 x 20 Cm |
| பின்புற உள்பக்க வர்ணம் | – 2000/= | 14 x 20 Cm |
| உள் கறுப்பு வெள்ளை (முழுப்பக்கம்) | – 1000/= | 12 x 18 Cm |
| உள் கறுப்பு வெள்ளை (½ பக்கம்) | – 750/= | 06 x 18 Cm |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org